VOLUME ONE

கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படை மூலக்கூறுகள்

WITNESS LEE &
WATCHMAN NEE

திரட்டு ஒன்று

கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படை மூலக்கூறுகள்

விட்னெஸ் லீ & வாட்சுமன் நீ

விற்பனைக்கு அல்ல
இலவச விநியோகத்திற்காக மட்டும்

Living Stream Ministry
Anaheim, California • www.lsm.org

© 2010 Living Stream Ministry

All rights reserved. No part of this work may be reproduced or transmitted in any form or by any means—graphic, electronic, or mechanical, including photocopying, recording, or information storage and retrieval systems—without written permission from the publisher.

Original Title:
THE BASIC ELEMENTS OF THE CHRISTIAN LIFE VOL. 1
© 2003 Living Stream Ministry

Kiristhava Vazhkaiyen Adippadai Mulakurrugal. Therattu- 1
(Tamil)

By
WITNESS LEE and WATCHMAN NEE

First Edition, 2010

ISBN: **978-0-7363-4463-0**

Translated in India by
Amana Literature [Pvt] Ltd.
Gurgaon, Haryana, India
Email: office@amanaliterature.in
www.amanaliterature.in

See back page for local distribution information.

Published by
Living Stream Ministry
2431 W. La Palma Ave., Anaheim, CA 92801 U.S.A.
P. O. Box 2121,Anaheim, CA 92814 U.S.A.

பொருளடக்கம்

தலைப்பு		*பக்கம்*
	முன்னுரை	5
1	மனித வாழ்வின் பரம இரகசியம்	7
2	இரட்சிப்பின் நிச்சயமும், பாதுகாப்பும், மகிழ்ச்சியும்	11
3	கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம்	23
4	கர்த்தருடைய நாமத்தை நோக்கிக் கூப்பிடுதல்	35
5	கிறிஸ்துவை அனுபவமாக்குவதற்கான திறவுகோல்— மனித ஆவி	43
	கர்த்தருடைய இரண்டு வேலையாட்களைப்பற்றி	53

முன்னுரை

இப்புத்தகம் ஐந்து அத்தியாயங்களால் தொகுக்கப்பட்டுள்ளது; இவைகள் கிறிஸ்தவ வாழ்க்கையின் சில ஆரம்ப, மிக அடிப்படையான மூலக்கூறுகளைக் காண்பிக்கின்றன. முதல் அத்தியாயம் மனித வாழ்வின் பரம இரகசியத்தை ஆராய்கிறது, எப்படி கிறிஸ்துவில் விசுவாசிக்கிற ஒருவனாக மாறுவது என்பதை அது வெளிப்படுத்துகிறது. அடுத்த நான்கு அத்தியாயங்களும் காண்பிப்பது என்னவென்றால்: 1) கிறிஸ்துவிலுள்ள நம் இரட்சிப்பின் நிச்சயமும், பாதுகாப்பும், மகிழ்ச்சியும்; 2) நம் சகல பாவத்தையும் சுத்திகரிக்கக்கூடிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தை தொடக்கத்திலும், தொடர்ச்சியாகவும் நாம் அனுபவித்தல்; 3) நாம் கர்த்தருயை பெயரை நோக்கிக் கூப்பிடுவதால் கிறிஸ்துவை அனு தினமும் அனுபவித்துமகிழ்தல்; மற்றும் 4) கிறிஸ்துவை அனுபவமாக்குவதற்கான திறவுகோல்—நம் மனித ஆவி.

இந்த அத்தியாயங்களின் பொருளடக்கம், விட்னெஸ் லீ எழுதியவைகளிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன; இவைகள் *மனித வாழ்வின் பரம இரகசியம், இரட்சிப்பின் நிச்சயமும் பாதுகாப்பும் மகிழ்ச்சியும், கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம், கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிடுதல், கிறிஸ்துவை அனுபவமாக்குவதற்கான திறவுகோல்—நம் மனித ஆவி* ஆகிய தனித்தனி சிறுபுத்தகங்களாக ஏற்கெனவே வெளியிடப்பட்டிருக்கின்றன.

அத்தியாயம் ஒன்று

மனித வாழ்வின் பரம இரகசியம்

இந்த உலகத்தில் நீங்கள் ஏன் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள் என்றும், உங்களுடைய வாழ்க்கையின் நோக்கம் என்ன என்றும் நீங்கள் எண்ணிப்பார்த்ததுண்டா? இந்தப் பரம இரகசியத்தைத் திறப்பதற்கு ஆறு திறவுகோல்கள் இருக்கின்றன.

1. தேவனுடைய திட்டம்

தேவன் மனிதன்மூலமாக தம்மை வெளியாக்க விரும்பு கிறார் (ரோமர் 8:29). இந்த நோக்கத்திற்காகவே அவர் மனிதனை அவருடைய சொந்த சாயலில் சிருஷ்டித்தார் (ஆதி. 1:26). ஒரு கையுறை கையை உள்ளடக்கிக் கொள்வதற்காகக் கையின் சாயலில் உருவாக்கப்படுவது போல, மனிதனும் தேவனை உள்ளடக்கிக்கொள்வதற்காக தேவனின் சாயலில் உருவாக்கப்பட்டான். அவன், தேவனை தன் உள்ளடக்கமாகப் பெற்றுக்கொள்வதினால் தேவனை வெளியாக்கமுடியும் (2 கொரி. 4:7).



2. மனிதன்

தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தேவன் மனிதனை ஒரு பாத்திரமாக உண்டாக்கினார் (ரோமர் 9:21-24). இந்தப் பாத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டது: ஆவி, ஆத்துமா, சரீரம் (1 தெச. 5:23). சரீரம், பௌதீக மண்டலத்திலுள்ள பொருட்களைத் தொடர்புகொண்டு, பெற்றுக்கொள்கிறது. மனதிற்குரிய புலனாகிய ஆத்துமா, உளவியல் மண்டலத்திலுள்ள காரியங்களைத் தொடர்புகொண்டு, பெற்றுக்கொள்கிறது. மனிதனுடைய மிக உள்ளார்ந்த பகுதியாகிய மனிதனுடைய ஆவி, தேவனைத் தொடர்புகொள்வதற்காகவும், பெற்றுக்கொள்வதற்காகவும் உண்டாக்கப்பட்டது (யோவான் 4:24). வெறுமனே உணவை வயிற்றிலும், அறிவை மனதிலும் அடக்கிக்கொள்வதற்காக அல்ல, மாறாக தேவனை தன் ஆவியில் உள்ளடக்கிக் கொள்வதற்காகவே மனிதன் உண்டாக்கப்பட்டான் (எபே. 5:18).

3. மனிதனுடைய வீழ்ச்சி



ஆனால், மனிதன் தேவனை தன் ஆவிக்குள் ஜீவனாகப் பெற்றுக் கொள்வதற்குமுன், பாவம் அவனுக்குள் நுழைந்துவிட்டது (ரோமர் 5:12). பாவம் அவனது ஆவியை மரிக்கச்செய்தது (எபே. 2:1), அவனுடைய மனதில் அவனை தேவனுடைய எதிரியாக்கியது (கொலோ. 1:21), மற்றும் அவனுடைய சரீரத்தைப் பாவம் நிறைந்த மாம்சமாக தரம் இழக்கச்செய்தது (ஆதி. 6:3; ரோமர் 6:12). இப்படி பாவம் மனிதனுடைய மூன்று பகுதிகளையும் பழுதடையச்செய்து, அவனை தேவனுக்கு அன்னியனாக்கியது. இந்த நிலையில் மனிதன் தேவனைப் பெற்றுக்கொள்ள இயலாது.

4. தேவனுடைய பகிர்ந்தளித்தலுக்காக கிறிஸ்துவின் மீட்பு



தேவன் தம் ஆதி திட்டத்தை நிறைவேற்றாதபடி மனிதனுடைய வீழ்ச்சி அவரை நிறுத்திவிடவில்லை. அவருடைய திட்டத்தைச் செய்துமுடிப்பதற்காக, முதலாவது தேவன் இயேசுகிறிஸ்து என்றழைக்கப்பட்ட ஒரு மனிதனாக மாறினார் (யோவான் 1:1, 14). பின்பு மனிதனை மீட்க கிறிஸ்து சிலுவையில் மரித்தார் (எபே. 1:7), இப்படியாக அவனுடைய பாவத்தைப் போக்கி (யோவான் 1:29), அவனை தேவனிடம் மீண்டும் கொண்டுவந்தார் (எபே. 2:13). இறுதியாக, உயிர்த்தெழுதலில் அவர் ஜீவன் தரும் ஆவியானவராக மாறினார் (1 கொரி. 15:45). இதனால் அவருடைய ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியமான ஜீவனை மனிதனுடைய ஆவிக்குள் அவரால் பகிர்ந்தளிக்க முடிந்தது (யோவான் 20:22; 3:6).

5. மனிதனை மறுபடிஜெநிப்பித்தல்



கிறிஸ்து ஜீவன் தரும் ஆவியானவராக மாறியிருப்பதால், இப்பொழுது மனிதன் தேவனுடைய ஜீவனை தன் ஆவிக்குள் பெற்றுக்கொள்ளமுடியும். வேதாகமம் இதை மறுபடிபிறத்தல் என்றழைக்கிறது *(1 பேதுரு 1:4; யோவான் 3:3).* இந்த ஜீவனைப் பெற்றுக்கொள்ள மனிதன் தேவனிடம் மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசுவை விசுவாசிக்க வேண்டும் *(அப். 20:21; 16:31).*

மறுபடிபிறப்பதற்கு, வெறுமனே திறந்த இருதயத்துடன் கர்த்தரிடம் வந்து, இப்படியாக அவரிடம் கூறுங்கள்:

> *கர்த்தராகிய இயேசுவே, நான் ஒரு பாவி. நீர் எனக்குத் தேவை. எனக்காக மரித்ததற்காக உமக்கு நன்றி. கர்த்தராகிய இயேசுவே, என்னை மன்னியும். என் பாவங்கள் எல்லாவற்றிலிருந்தும் என்னை சுத்திகரியும். நீர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தீர் என்பதை விசுவாசிக்கிறேன். இப்பொழுதே உம்மை என் இரட்சகராகவும் ஜீவனாகவும் பெற்றுக்கொள்கிறேன். எனக்குள் வாரும்! உம்முடைய ஜீவனால் என்னை நிரப்பும்! கர்த்தராகிய இயேசுவே, உம்முடைய நோக்கத்திற்காக என்னை உம்மிடம் தருகிறேன்.*

6. தேவனுடைய முழுமையான இரட்சிப்பு

ஒரு விசுவாசி மறுபடிபிறந்தபிறகு ஞானஸ்நானம் பெற வேண்டும் *(மாற்கு 16:16).* பின்பு தேவன் விசுவாசிகளுடைய ஆவியிலிருந்து ஆத்துமாவிற்குள் தம்மையே ஜீவனாக படிப்படியாக பரப்புகின்ற வாழ்நாள் முழுவதுமான வழிமுறையை ஆரம்பிக்கிறார் *(எபே. 3:17).*

மறுசாயலாக்கப்படுதல் *(ரோமர் 12:2)* என்ற இந்த வழி முறைக்கு, மனித ஒத்துழைப்பு தேவைப்படுகிறது *(பிலி. 2:12).*

விசுவாசி, அவனுடைய எல்லா ஆசைகளும், எண்ணங்களும், தீர்மானங்களும் கிறிஸ்துவினுடையதாக மாறும்வரை அவனுடைய ஆத்துமாவிற்குள் பரவுவதற்கு கர்த்தரை அனுமதிப்பதின்மூலம் ஒத்துழைக்கிறான்.



இறுதியாக, கிறிஸ்து திரும்பிவரும்போது விசுவாசிகளுடைய சரீரத்தை தேவன் அவருடைய ஜீவனால் பூர்த்தியாக நிரப்புவார். இது மகிமைப்படுத்தப்படுதல் என்றழைக்கப் படுகிறது (பிலி. 3:21). ஒவ்வொரு பகுதியிலும் வெறுமையாகவும், பழுதடைந்தும் இருப்பதற்குப் பதிலாக, இந்த மனிதன் தேவனுடைய ஜீவனால் பூர்த்தியாக நிரப்பப்படுகிறான். இதுவே தேவனுடைய முழுமை யான இரட்சிப்பு! இப்படிப்பட்ட மனிதன், இப்போது தேவனை வெளி யாக்குகிறான், தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுகிறான்!

அத்தியாயம் இரண்டு

இரட்சிப்பின் நிச்சயமும், பாதுகாப்பும், மகிழ்ச்சியும்

இரட்சிப்பின் நிச்சயம்

நீங்கள் சமீபத்தில் கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்கிற அனுபவத்தை அடைந்திருந்தால், அந்த அனுபவத்தின் நிஜத்தைக்குறித்து சந்தேகித்த சமயங்கள் உங்களுக்கு நேரிட்டிருக்கலாம்; அதாவது, நீங்கள் நிஜமாகவே இரட்சிக்கப் பட்டிருக்கிறீர்களா என்ற கேள்வியைக் கேட்டிருக்கலாம். ஒரு திடமான அஸ்திபாரமாக இரட்சிப்பைப்பற்றிய நிஜமான நிச்சயம் இல்லையென்றால், ஒரு புதிய கிறிஸ்தவன் வளர்வதும், கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆழமான காரியங்களை அனுபவமாக்குவதும் கடினம். இருந்தாலும், நீங்கள் இரட்சிக்கப்பட்ட ஒரு நபர் என்பதை முழுமையாக, தயக்க மில்லாமல், அறியமுடியும் என்று வேதாகமம் சொல்லுகிறது. இது எப்படி முடியும்? *1* யோவான் *5:13*-ஐ நாம் வாசிக்கலாம்:

உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவ குமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்.

"நீங்கள் நினைக்கவும்," என்று இல்லை, *"நீங்கள் நம்பவும்,"* என்று இல்லை, மாறாக *"நீங்கள் அறியவும்,"* என்று இருக்கிறது. நாம் கண்டுபிடிப்பதற்கு மரிக்கும்வரை காத்திருக்கவேண்டிய தில்லை; இந்த நிச்சயம் இன்று நாம் அனுபவித்துமகிழ்வதற்காகவே இருக்கிறது.

இரட்சிப்பின் நிச்சயத்தை நாம் எப்படி பெறமுடியும்? மூன்று வழிவகைகள் இருக்கின்றன:

தேவன் அப்படிச் சொல்லுகிறார்

தேவனுடைய வார்த்தையே இரட்சிப்பின் நிச்சயத்திற்கான நம்முடைய முதல் வழிவகை. மனிதனுடைய வார்த்தை நம்பக மற்றதாக இருக்கிறது, ஆனால் தேவனுடைய வார்த்தையோ நிச்சயமாகவும், உறுதியாகவும் இருக்கிறது. தேவனால் பொய் சொல்லவேமுடியாது (எபி. *6:18*; எண். *23:19*). தேவன் சொல்வ தெல்லாம் என்றென்றைக்கும் உறுதியாய் நிலைத்திருக்கிறது (சங். *119:89*).

தேவன் சொல்லியிருப்பது யூகித்தலைப்பற்றிய காரியம் அல்ல. அவருடைய வார்த்தை தெளிவற்றதோ அல்லது ஐயப்பாடானதோ இல்லை. இன்று அது எழுதப்பட்ட வடிவில், அதாவது, வேதாகமத்தில், நம்மிடம் வருகிறது.

வேதாகமம் தேவனால் சுவாசித்து ஊதப்பட்ட அவருடைய சொந்த வார்த்தையாகும் (2 தீமோ. 3:16). நாம் இந்த வார்த்தையை எடுத்துக்கொள்ளமுடியும், இந்த வார்த்தையை விசுவாசிக்கமுடியும், இந்த வார்த்தையை நம்பமுடியும்.

அப்படியானால், இரட்சிப்பைப்பற்றி தேவன் என்ன சொல்லுகிறார்? இயேசுகிறிஸ்து என்ற நபரே இரட்சிப்பின் வழி என்று அவர் சொல்லுகிறார் (யோவான் 3:16; 14:6; அப். 10:43; 16:31). இயேசுகிறிஸ்து மரித்தோரைவிட்டு எழுந்தார் என்பதை விசுவாசித்து, இயேசுவைக் கர்த்தர் என்று தன் வாயினால் அறிக்கைசெய்கிற எவனும் இரட்சிக்கப்பட்டிருக்கிறான் என்று அவர் சொல்லுகிறார். கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிடுகிற எவனும் இரட்சிக்கப்படுவான் என்று அவர் சொல்லுகிறார் (ரோமர் 10:9-13).

நீங்கள் இதைச் செய்திருக்கிறீர்களா? நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, அவரே உங்கள் கர்த்தர் என்று வெளிப்படையாக அறிக்கைசெய்திருக்கிறீர்களா? நீங்கள் அவருடைய பெயரை நோக்கிக் கூப்பிட்டிருக்கிறீர்களா? அப்படிச் செய்திருந்தால், நீங்கள் நிஜமாகவே இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள். தேவன் அப்படித்தான் சொல்லுகிறார். அது போதும்.

பரிசுத்த ஆவியானவர் சாட்சிகொடுக்கிறார்

நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று நமக்குச் சொல்லுகிற நமக்கு வெளியே இருக்கும் தேவனுடைய வார்த்தை நம்மிடம் இருப்பது மட்டுமல்ல, அதே காரியத்தையே நமக்குச் சொல்லுகிற நமக்கு உள்ளே இருக்கும் சாட்சியும் நம்மிடம் இருக்கிறது. வேதாகமம் வெளியே இருந்து நம்மிடம் என்ன பேசுகிறதோ, அதையே ஆவியானவர் நமக்குள் உறுதிப்படுத்துகிறார். "தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அந்தச் சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான்," என்று 1 யோவான் 5:10 கூறுகிறது.

சிலவேளைகளில், நாம் கிறிஸ்துவைப் பெற்றுக்கொண்ட பிறகு, நாம் இரட்சிக்கப்பட்டதுபோல உணராமல் இருக்கக்கூடும். இருந்தாலும், நம்முடைய ஆள்தத்துவத்தின் மிக ஆழமான பகுதியாகிய நம்முடைய ஆவியில் நாம் சோதித்துப்பார்த்தால், நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற ஒருவிதமான உள்ளான சாட்சியை, ஒரு நிச்சயத்தை, காண்போம். "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்" (ரோமர் 8:16). ஆவியானவருடைய உள்ளான சாட்சி உங்களிடம் இருக்கிறதா என்று நீங்கள் சந்தேகித்தால், இந்த எளிமையான பரிசோதனையைச் செய்துபாருங்கள்: "நான் தேவனுடைய பிள்ளை இல்லை!"

என்று தைரியமாகப் பறைசாற்ற முயன்றுப் பாருங்கள். இப்படிப்பட்ட பொய்யை தாழ்ந்தகுரலில் சொல்லுவதுகூட உங்களுக்கு மிகக் கடினமாக இருக்கும். ஏன்? ஏனென்றால், "நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறீர்கள்!" என்று பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் சாட்சிகொடுக்கிறார்.

சகோதரர்களுக்கான நம் அன்பு நிரூபணமாக இருக்கிறது

கிறிஸ்துவில் உள்ள மற்ற சகோதர சகோதரிகளுக்கான நம்முடைய அன்பு, நிச்சயத்தின் மூன்றாவது வழிவகையாக இருக்கிறது. "நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கள் ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்," என்று 1 யோவான் 3:14 கூறுகிறது. இரட்சிக்கப்பட்ட ஒரு நபர், இரட்சிக்கப்பட்ட மற்றவர்கள்மேல் ஒருவிதமான அன்பை சந்தேகமேயில்லாமல் உணருகிறான். நீங்கள் மற்றவர்களுடன் ஐக்கியங்கொள்ள, கிறிஸ்துவை அனுபவித்து மகிழ, ஒரு விருப்பத்தை உணருகிறீர்கள். இது இரட்சிக்கப்படுவதின் இயல்பான விளைவாக, அதாவது, இரட்சிக்கப்பட்ட ஒரு நபரின் மிகத் தெளிவான அடையாளங்களுள் ஒன்றாக இருக்கிறது. இந்த அன்பு இன்றைய யுகத்தின் இழிவான, சுயநலமான "அன்பைத்" தாண்டிச்செல்கிறது. இது பாரபட்சமில்லாத அன்பு; இது நம்மைப்போன்றவர்களையும், நம்மைவிட வித்தியாசமானவர்களையும் நேசிக்கிறது. இதுவே உலகம் ஏங்குகிற நிஜமான ஒருமையும், இசைவும் ஆகும். இருப்பினும், நாம் கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்ளும்போது, இது நம்முடையதாக இருக்கிறது. "சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது!" (சங். 133:1). இதுதான் இரட்சிக்கப்பட்ட ஒரு நபரின் சாட்சி.

தேவனுடைய வார்த்தை, ஆவியானவருடைய உள்ளான சாட்சி, சகோதரர்களுக்கான நம் அன்பு என்ற இந்த மூன்று சாட்சிகளினால், நாம் நிஜமாகவே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நாம் அறிந்து, நிச்சயமாயிருக்கலாம்.

இரட்சிப்பின் பாதுகாப்பு

ஒரு கிறிஸ்தவன், தான் நிஜமாகவே இரட்சிக்கப் பட்டிருப்பதாக நிச்சயத்தைப் பெற்றபிறகு, "நான் இன்று இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்பதை அறிந்திருக்கிறேன், ஆனால் நாளைக்கும் நான் இரட்சிக்கப்பட்டவனாக இருப்பேன் என்பதை நான் எப்படி அறிவேன்? நான் என் இரட்சிப்பை இழப்பது சாத்தியமா?" இப்படிப்பட்டவனுக்கு, இனி அது *நிச்சயத்தைப்*பற்றிய கேள்வி அல்ல, மாறாக *பாதுகாப்பைப்* பற்றிய கேள்வியாக இருக்கிறது.

வங்கியில் இலட்சங்களையுடைய ஒருவன், செல்வங்கள்

தன்னுடையவைகள் தான் என்ற *நிச்சயம்* இருக்கிறது. ஆனால் வங்கியினர் தங்கள் சேமிப்புப் பெட்டகத்தை மூடாமல் வைத்திருப்போம் என்பார்களானால், செல்வம்நிறைந்த நமது நண்பருக்கு தன் செல்வங்களின் *பாதுகாப்பைப்பற்றி* நிஜமாகவே பிரச்சனை இருக்கும். அவன் இன்று செல்வந்தனாக இருப்பதை அறிந்திருக்கிறான், ஆனால் நாளைய தினத்தைப் பற்றி அவனுக்குத் தெரியாது.

நம் இரட்சிப்பு அப்படியா? அது, இன்றைக்கு நம்மிடம் இருந்தாலும், எந்தக் கணப்பொழுதிலும் நாம் இழந்துபோகக் கூடிய ஒன்றா? சந்தேகமேயில்லாமல், இல்லை என்பதுதான் பதில். "தேவன் செய்வதெல்லாம், என்றென்றைக்கும் நிலைத் திருக்கும் என்பதை நான் அறிந்திருக்கிறேன்," என்று நாம் தைரியமாகச் சொல்லமுடியும் (*பிர. 3:14*).

கிறிஸ்துவில் நம்முடைய இரட்சிப்பைப்பற்றிய ஓர் அற்புதமான உண்மை என்னவென்றால், அது திரும்பப் பெறத்தக்கது அல்ல, அதாவது, மாற்றப்பட முடியாதது. ஒருமுறை நாம் இரட்சிக்கப்பட்டால், என்றென்றைக்கும் நாம் இரட்சிக்கப்பட்டவர்களே; ஏனென்றால், நம் இரட்சிப்பு தேவனுடைய சுபாவத்தையும், நபரையுமே அதின் ஆதாரமாகக் கொண்டிருக்கிறது.

இரட்சிப்பு தேவனால் ஆரம்பிக்கப்பட்டது

"நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்," என்று இயேசு தம் சீடர்களிடம் கூறினார் (*யோவான் 15:16*). வேறு வார்த்தைகளில் சொல்வதானால், இரட்சிப்பு தேவனுடைய யோசனையாகும், அது நம்முடைய யோசனை அல்ல. கடந்த நித்தியத்தில், நாம் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டு, முன்குறிக்கப்பட்டோம் (குறியிடப்பட்டோம்) (*எபே. 1:4, 6*). மேலும், அவரே நம்மை அழைத்தவர் (*ரோமர் 8:29-30*). நம்மை இரட்சிக்கவேண்டும் என்பது முதலாவது தேவனுடைய திட்டமாக இருந்தபடியால், நம்மை அந்த இரட்சிப்பில் காத்துக்கொள்ளவேண்டும் என்பதும் அவருடைய திட்டம் தான். தேவன் நம்மைத் தெரிந்துகொண்டு, நம்மைக் குறியிட்டு, இரட்சிப்பிற்குள் அழைத்து, அதன்பின் நம்மைக் கைவிடமுடியுமா? இல்லை, தேவனுடைய இரட்சிப்பு நித்தியமானது.

தேவனுடைய அன்பும் கிருபையும் நித்தியமானவைகள்

மேலும், நம்மிடத்தில் தேவனுடைய அன்பும், கிருபையும் நிபந்தனைக்குரியதோ அல்லது தற்காலிகமானதோ அல்ல. நம்மை இரட்சித்தது நம்முடைய பக்கத்திலிருந்து வந்த அன்பு அல்ல,

மாறாக அவருடைய பக்கத்திலிருந்து வந்த அன்பே ஆகும் (1 யோவான் 4:10). அவர் நித்திய அன்பினால் நம்மை நேசித்தார் (எரே. 31:3). அவருடைய கிருபை உலகம் தோன்றுவதற்குமுன்பே கடந்த நித்தியத்தில் நம்மிடம் அருளப்பட்டது (2 தீமோ. 1:9). கிறிஸ்து நம்மை நேசிக்கும் போது, அவர் முற்றும்முடிய நம்மை நேசிக்கிறார் (யோவான் 13:1). நம்முடைய பக்கத்தில் உள்ள எந்தப் பாவமோ, தோல்வியோ அல்லது பெலவீனமோ கிறிஸ்து இயேசுவில் உள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்க முடியாது (ரோமர் 8:35-39).

தேவன் நீதியானவர்

ஆனால் நம்முடைய இரட்சிப்பு தேவனுடைய அன்பையும் கிருபையையும் மட்டும் ஆதாரமாகக் கொண்டிருக்கவில்லை, அதைவிட அதிகமாக தேவனுடைய நீதியை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. நம்முடைய தேவன் நீதியான தேவன். நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் அஸ்திபார மாக இருக்கின்றன (சங். 89:14). தேவன் அநீதியாக இருப்பா ரானால், அவருடைய சிங்காசனம் அதின் அஸ்திபாரத்தை இழந்துவிடும். ஆகவே, ஏதோவொரு வழியில் நம்முடைய இரட்சிப்பில் தேவனுடைய நீதி சம்பந்தப்பட்டிருந்தால், மெய்யாகவே அது மிகப் பலமாக இருக்கிறது.

நீங்கள் சிவப்பு விளக்கைத் தாண்டிச்சென்றுவிட்டீர்கள், உங்களுக்கு 25 டாலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்று வைத்துக்கொள்வோம். அந்த 25 டாலர் ஒரு நீதியான அபராதமாக இருக்கிறது, நீங்கள் அதைச் செலுத்தவேண்டும் என்று தேசத்தின் சட்டம் கோருகிறது. ஓர் உரிமையியல் நீதிபதி வெறுமனே உங்களுடைய குற்றத்தைப் பார்க்காமல் விட்டு, கட்டணம்செலுத்தாமல் உங்களை விடுதலைசெய்தால், அவர் அநீதியான நீதிபதியாக இருக்கிறார். நீதிபதி உங்களை நேசிக்கிறாரா இல்லையா என்பதைப்பற்றிய விஷயமல்ல இது; அவர் அபராதத்தை வசூலிக்கும்படி சட்டத்தினால் கட்டப் பட்டவராக இருக்கிறார்.

அதேபோல, நாம் இரட்சிக்கப்படுவதற்குமுன்பு, தேவனுக்குமுன்பாக நம்முடைய பிரச்சினை சட்டப்பூர்வமான ஒன்றாக இருந்தது. நாம் நம்முடைய பாவத்தினால் தேவ னுடைய சட்டத்தை உடைத்துவிட்டோம், இதனால் சட்டத்தின் நீதியான நியாயத்தீர்ப்பை அடைந்தோம். தேவனுடைய சட்டத்தின்படி, சட்டத்தை மீறுதல் இருக்கிற இடத்தில், மரணம் நிகழவேண்டும் (ரோமர் 6:23; எசே. 18:4). தேவன் நம்மை நேசிப்பதையும், நம் பாவங்களைப் பார்க்காமல் விடுவதையும், சட்டத்தின் நியாயத்தீர்ப்பைக்குறித்து மறந்து விடுவதையும்பற்றிய காரியமல்ல

இது. தேவன் இதைச் செய்வாரானால், அவருடைய சிங்காசனமே தள்ளாடி விழும். தேவன் பாவத்தை நியாயந்தீர்க்கும்படி தம்முடைய சொந்த சட்டத்தினால் கட்டப்பட்டவராக இருக்கிறார். அவரால் என்ன செய்யமுடியும்?

தேவன் நம்மை இரட்சிக்க விரும்பினதாலும், பாவத்தின் கடனை நாமாகவே செலுத்தமுடியாததினாலும், அவர் தாமே இதைச் செய்யும்படி தம் இரக்கத்தில் தீர்மானித்தார். இரண்டாயிரம் வருடங்களுக்குமுன்பு, நம் பாவத்திற்கான கடனைச் செலுத்தும்படி சிலுவையில் மரிக்க மனித மாம்சமான தேவனாகிய இயேசுகிறிஸ்து வந்தார். பாவ மில்லாதவராகிய அவர் மட்டுமே இந்தப் பதிலீடான மரணத்தை மரிப்பதற்கு தகுதியுடையவர். நம்முடைய மரணமாக தேவனால் எண்ணப்பட்ட அவருடைய மரணம் தேவனுக்கு ஏற்புடையதாக இருந்தது; தேவன் அவரை மரித்தோரைவிட்டு எழுப்பினார். இப்போது நாம் கிறிஸ்துவில் விசுவாசிக்கும்போது, தேவனுடைய பார்வையில் அவருடைய மரணம் நம்முடைய மரணமாக எண்ணப்படுகிறது. இவ்வாறு, நம்முடைய பாவத்தின் கடன் நீதியான முறையில் செலுத்தப் படுகிறது, நாம் இரட்சிக்கப்படுகிறோம்.

இப்போது, கிறிஸ்து விலைகொடுத்து வாங்கின இந்த இரட்சிப்பை தேவன் திரும்பவும் எடுத்துக்கொள்ளமுடியுமா? முடியவே முடியாது! கடன் செலுத்தப்பட்டதால், தேவன் மீண்டும் நம்மிடம் அதைக் கோருவது அநீதியாயிருக்கும். முன்பு, நம் தண்டனைத்தீர்ப்பைக் கோரின அதே நீதி இப்போது நம் நீதிப்படுத்தப்படுதலைக் கோருகிறது. இது நம் இரட்சிப்பிற்கு எப்பேர்ப்பட்ட வல்லமையுள்ள பாது காப்பைக் கொடுக்கிறது! உலக நீதிபதிகூட அதே அபராதத்தை இரண்டுமுறை செலுத்தும்படி கோரமாட்டார். எல்லா நியாயத் திற்கும், நீதிக்கும் ஊற்றாக இருக்கிற தேவன் நிச்சயமாக அப்படிச் செய்யமுடியாது. ஒரு பாடலில் வாட்ச்மேன் நீ எழுதியதுபோல:

கடன் நீக்கமும், மன்னிப்பும்
எனக்காய் அவர் அடைந்தார்,
பாவ கடன் இல்லை;
தேவன் இருவரைக் கோரார்,
முன்பென் பிணையாம் தம் மைந்தன்,
கோரிடார் பின்பென்னை.

ஆகவே, தேவன் நம்மை இரட்சிக்கும்போது, அவர் தம் நீதியைக் காண்பிக்கிறார் என்று வேதாகமம் பறைசாற்றுகிறது (ரோமர் *1:16-17; 3:25-26*).

நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாறியிருக்கிறோம்

நாம் இரட்சிக்கப்பட்டபோது, நாம் ஏதோவொன்றைப் பெற்றுக்கொண்டது மட்டுமல்ல; நாம் ஏதோவொன்றாக மாறவும் செய்தோம். நாம் தேவனுடைய நித்திய ஜீவனால் பிறந்த, தேவனுடைய பிள்ளைகளாக மாறினோம் (யோவான் *1:12-13*). ஒரு மனித தகப்பன் தன் பிள்ளையிடம் கொடுத்த ஒரு கொடையைத் திரும்பவும் எடுத்துக்கொள்ளமுடியும், ஆனால் அவர் கொடுத்த மனித ஜீவனை ஒருபோதும் திரும்பவும் எடுத்துக்கொள்ளமுடியாது. பிள்ளை தவறாக நடந்துகொண்டாலும், பிள்ளை இன்னும் தகப்பனுடையது தான். அதுபோல, நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக் கிறோம். நம்மிடம் அநேகப் பெலவீனங்கள் இருக்கலாம் என்றாலும், அவருடைய சிட்சைத் தேவைப்படலாம் என்றாலும்கூட, நாம் அவருடைய பிள்ளைகள் என்ற உண்மையை நம் பாவங்களும், பெலவீனங்களும் மாற்ற முடியாது. நாம் நம்முடைய இரண்டாவது பிறப்பினால் பெற்ற ஜீவன் நித்திய ஜீவன், அதாவது, அழிக்கப்படமுடியாத ஜீவன், தேவனுடைய ஜீவன், ஒருபோதும் மரிக்கமுடியாத ஜீவன். ஒருமுறை நாம் மீண்டும் பிறந்துவிட்டால், நாம் "பிறக்காமல் போகவே" முடியாது.

தேவன் பலமானவர்

நம் இரட்சிப்பின் பாதுகாப்பிற்கான இன்னொரு காரணம் தேவனுடைய பலமாகும். நம்மை அவரிடமிருந்து பறித்துக் கொள்ள எதையும் அல்லது யாரையும் அனுமதிக்க சித்த முள்ளவராக இல்லை. "நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவ தில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை....என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக் கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக் கொள்ள ஒருவனாலும் கூடாது," என்று இயேசு சொன்னார் (யோவான் *10:28-29*). பிதாவின் கையும், கர்த்தராகிய இயேசுவின் கையும் நம்மை உறுதியாகப் பிடித்துக்கொண் டிருக்கும் இரண்டு கைகளாகும். நாம் நம் பிதாவைவிட்டு ஓடிப்போக முயன்றாலும், அது சாத்தியமற்றதாக இருக்கும். தேவன் சாத்தானைவிட பலமானவர் மட்டுமல்ல, அவர் நம்மையும்விட பலமானவர்.

தேவன் ஒருபோதும் மாறுவதில்லை

நம் இரட்சிப்பை இழப்பது சாத்தியமாயிருந்தால், நம்மில் பலர் அதை நீண்ட காலத்திற்குமுன்பே இழந்திருப்போம். மனிதர்கள் என்ற முறையில் நாம் பல மாற்றங்களினூடாய்க் கடந்துசெல்கிறோம். ஒருநாள் நாம் சூடாக இருக்கிறோம்; மறுநாள் குளிராக இருக்கிறோம். ஆனால் நம்முடைய இரட்சிப்பு நம்

உறுதியற்ற உணர்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டது அல்ல. நம்மிடத்தில் தமது அன்பிலும், உண்மைத் தனத்திலும் மாறாதவராக இருக்கிற தேவனில் அது வேரூன்றி, நிலைகொண்டிருக்கிறது (மல். 3:6). "சோகதிளின் பிதாவினிடத்தில்...யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை," என்று யாக்கோபு 1:17 கூறுகிறது. "அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது," என்று புலம்பல் 3:22-23 கூறுகிறது. நம்மை இரட்சிப்பதற்கு அவருடைய அன்பு போதுமானது என்றால், நம்மை அதே இரட்சிப்பில் காத்துக்கொள்வதற்கும் நிச்சயமாக அவருடைய அன்பு போதுமானது. அவருடைய உண்மைத்தனம் பெரிதாயிருக்கிறது!

கிறிஸ்து வாக்களித்திருக்கிறார்

கடைசியாக, நம்மைக் காத்துக்கொள்வதாகவும், நம்மைத் தாங்கிப்பிடித்துக்கொள்வதாகவும், நம்மை ஒருபோதும் விட்டுவிடாததாகவும் கிறிஸ்து தாமே வாக்களித்திருக்கிறார். பலவேளைகளில் மனிதர்கள் தங்கள் வாக்குறுதிகளைக் காத்துக்கொள்வதில் அநீதியுள்ளவர்களாக இருந்தாலும், கிறிஸ்து தாம் வாக்களித்ததை நிறைவேற்றுவதில் ஒருபோதும் தவறுவதில்லை. அவருடைய வாக்குறுதியை கவனியுங்கள்: "என்னிடத்தில் வருகிறவனை நான் ஒருக்காலும் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6:37); "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" (எபி. 13:5). இங்கு கர்த்தருடைய வாக்குறுதிகள் நிபந்தனையற்றவைகளாக இருக்கின்றன. "ஒருக்காலும்," அதாவது, எந்த சூழ்நிலையாக இருந்தாலும் சரி, அவர் நம்மைப் புறம்பே தள்ளுவதில்லை அல்லது நம்மைத் தாங்கிப்பிடிப்பதை நிறுத்திவிடுவதில்லை. இதுவே அவருடைய உண்மையுள்ள வாக்குறுதி.

நம்முடைய இரட்சிப்பிற்கு என்னே வல்லமையான பாது காப்பு இருக்கிறது! தேவனுடைய தேர்ந்தெடுத்தலும், அவருடைய முன்குறித்தலும், அவருடைய அழைப்பும், அவருடைய அன்பும், அவருடைய கிருபையும், அவருடைய நீதியும், அவருடைய ஜீவனும், அவருடைய பலமும், அவருடைய மாறாத உண்மைத்தனமும், அவருடைய வாக்குறுதிகளும் நம்முடைய இரட்சிப்பின் அஸ்திபாரமாகவும், உத்தரவாதமாகவும், பாதுகாப்பாகவும் இருக்கிறது. நாமெல்லாரும் பவுலுடன் சேர்ந்து பறைசாற்றமுடியும்: "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள்வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக் கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" (2 தீமோ. 1:12).

இரட்சிப்பின் மகிழ்ச்சி

நாம் நம் இரட்சிப்பின் நிச்சயத்தைப் பார்த்திருக்கிறோம், அதாவது, நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று நாம் அறிவது எப்படி என்பதைப் பார்த்திருக்கிறோம். நம் இரட்சிப்பின் பாதுகாப்பையும், அதாவது, நாம் நம் இரட்சிப்பை இழக்காமல் இருப்பது எப்படி என்பதையும் பார்த்திருக்கிறோம். ஆனால் அது போதுமா? துரதிருஷ்ட வசமாக, அநேகக் கிறிஸ்தவர்கள் இதுவரைக்கும் போவதிலேயே திருப்தியடைந்துவிடுகிறார்கள், அதாவது, இரட்சிப்பைக் *கொண்டிருக்கிறார்கள்*, ஆனால் அந்த இரட்சிப்பின் மகிழ்ச்சியை அல்லது *அனுபவமகிழ்ச்சியைக்* கொஞ்சமாகவே கொண்டிருக்கிறார்கள்.

வங்கியில் இலட்சங்களை உடைய நமது நண்பர், தான் செல்வந்தனாக இருக்கிற *நிச்சயத்தைக்* கொண்டிருக்கலாம், மேலும், அவன் தன்னுடைய வைப்புத்தொகை பத்திரமாக இருக்கிறது என்பதை அறிவதின் *பாதுகாப்பைக்* கொண் டிருக்கலாம். ஆனால் அவன் பத்து காசுகூட செலவழிக்காமல், தரித்திரனுடைய வாழ்க்கையை வாழ்வது போதும் என்றிருந் தால், அந்தச் செல்வங்களின் *அனுபவமகிழ்ச்சி* அவனுக்கு இருக்கிறது என்று நாம் சொல்லமுடியாது. அனுபவம்சாராத விதத்தில் பேசுவதானால், அவன் செல்வந்தனாக இருக்கிறான், ஆனால் அவனுடைய நடைமுறை அனுபவத்தில் அவனிடம் ஒன்றுமில்லை.

இதுதான் இன்று அநேகக் கிறிஸ்தவர்களின் நிலைமை. அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள், ஆனால் தங்கள் அனுதின வாழ்க்கையில் கிறிஸ்துவின் ஆராய்ந்தறியமுடியாத செல்வங்களைப்பற்றிய சிறிதளவு அனுபவமே அவர்களிடம் இருக்கிறது *(எபே. 3:8)*. நாம் கிறிஸ்துவைக் கொண்டிருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, நாம் அவரை அனுபவித்து மகிழவேண்டும், சொல்லப்போனால், முற்றும்முடிய அனு பவித்துமகிழவேண்டும் என்பதே தேவனுடைய நோக்கம் *(யோவான் 10:10; பிலி. 4:4)*. "சொல்லிமுடியாததும் மகிமை யால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூருவதே" ஒரு கிறிஸ்தவனின் இயல்பான நிலைமை யாகும் *(1 பேதுரு 1:8)*.

ஆனால், நம்மிடம் இந்தப் பொங்கிவழிகிற மகிழ்ச்சி இல்லாத வேளைகள், சொல்லப்போனால், அநேக வேளைகள் உண்டு என்பதை ஏறக்குறைய நம்மில் எல்லாரும் ஒத்துக் கொள்வார்கள். நாம் நம்முடைய இரட்சிப்பை இழந்து விட்டோம் என்பதா இதன் அர்த்தம்? இல்லவே இல்லை! நம்முடைய இரட்சிப்பு நம்மை அல்ல, தேவனையே ஆதார மாகக் கொண்டிருக்கிறது. ஆனால் நாம் நம்முடைய இரட்சிப்பை இழக்கமுடியாது என்றாலும், அந்த

இரட்சிப்பின் மகிழ்ச்சியை இழக்கமுடியும்.

மகிழ்ச்சியின் இழப்பு

அப்படியானால், சில வேளைகளில் நாம் நம்முடைய மகிழ்ச்சியை இழக்கும்படிச் செய்கிற காரியங்கள் என்ன? முதல் காரியம், பாவம். மகிழ்ச்சி, நாம் தேவனோடு உடையாத ஐக்கியங்கொள்வதைச் சார்ந்திருக்கிறது, ஆனால் பாவம் நம்மை அவரிடமிருந்து பிரித்து, அவர் தம்முடைய முகத்தை மறைத்துக்கொள்ளும்படிச் செய்கிறது (ஏசா. 59:1-2).

இரண்டாவது காரியம், பரிசுத்த ஆவியைத் துக்கப் படுத்துதல் ஆகும் (எபே. 4:30). நாம் இரட்சிக்கப்படும்போது, நாம் தேவனுடைய ஆலயமாக மாறி, அவருடைய ஆவியை நம்முள் தங்கியிருக்கப் பெற்றிருக்கிறோம் (1 கொரி. 6:17, 19; ரோமர் 8:9, 11, 16). நமக்குள் இருக்கிற இந்த ஆவியானவர் ஓர் "சக்தியோ" அல்லது ஒரு "பொருளோ" அல்ல, மாறாக வாழ்கிற ஒரு நபர், அதாவது, இயேசுகிறிஸ்து தாமே (1 கொரி. 15:45; 2 கொரி. 3:17; 13:5). வாழ்கிற ஒவ்வொரு நபரையும்போல, அவருக்கு உணர்ச்சிகளும், மனப்பான்மை களும் இருக்கின்றன. இவ்வாறு, நாம் அவருக்கு எதிரான காரியங்களைப் பேசும்போது அல்லது செய்யும்போது, அவர் நமக்குள் துக்கப்படுகிறார். பரிசுத்த ஆவியானவர் துக்கப் படும்போது, அவரோடு இணைந்திருக்கிற நம்முடைய ஆவி (1 கொரி. 6:17) துக்கப்படுகிறது; நாம் நம்முடைய மகிழ்ச்சியை இழக்கிறோம்.

மகிழ்ச்சியின் பராமரிப்பு

நம்முடைய இரட்சிப்பு ஒரு பாறையைப்போல அசைக்கப் படமுடியாதது, ஆனால் நம்முடைய இரட்சிப்பின் மகிழ்ச்சி ஒரு சிறிய தென்றலினால் சுலபமாக நிலைக்குலையசெய்யப் படுகிற ஒரு மிருதுவான மலரைப்போன்றது. ஆகவே, அது, நாம் பேணிவளர்த்து, போஷிக்கவேண்டிய ஒன்றாக இருக்கிறது. அப்படியானால், இந்த மகிழ்ச்சியைப் பராமரிக்க நாம் என்ன செய்யலாம்?

முதலாவது, நாம் நம் பாவங்களை அறிக்கைசெய்யலாம் (1 யோவான் 1:7, 9). நாம் நம் குற்றங்களை கர்த்தரிடம் அறிக்கை செய்யும்போது, அவருடைய இரத்தம் நம்மை சுத்தமாக்குகிறது, அவருடன் நம் ஐக்கியம் பழைய நிலைக்குத் திருப்பப்படுகிறது. தாவீது பாவஞ்செய்தபிறகு, "உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தாரும்," என்று ஜெபித்தான் (சங். 51:12). காத் திருக்கத் தேவையில்லை. கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம் எல்லாப் பாவத்திலிருந்தும் நம்மை சுத்தமாக்குகிறது.

இரண்டாவது, நாம் தேவனுடைய வார்த்தையை நம் உணவாக எடுத்துக்கொள்ளலாம். "உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது" என்று எரேமியா கூறினார் (எரே. 15:16). தேவனுடைய வார்த்தையை வாசித்து, அதை ஜெபித்தப்பிறகு, நம்முடைய இருதயம் அனுபவமகிழ்ச்சியினால் பொங்கி வழிகிறதை பலவேளைகளில் நாம் காண்கிறோம். பட்டினியா யிருக்கிற எந்த மனிதனும் சந்தோஷமாக இல்லை. அதுபோல, நாம் பட்டினியாயிருக்கிற கிறிஸ்தவர்களாக இருக்கக்கூடாது. நாம் தேவனுடைய வார்த்தையைத் தொடர்ச்சியாக சாப்பிட்டு, விருந்துண்ணவேண்டும் (மத். 4:4).

மூன்றாவது, நாம் ஜெபிக்கலாம். பலவேளைகளில், நாம் நம் இருதயத்தைத் திறந்து, கர்த்தரிடம் மனம்விட்டுப் பேசின பிறகு, ஆழமான மகிழ்ச்சியையும், புத்துணர்வையும் உணர் கிறோம். அவர் தம்முடைய ஜெப வீட்டில் நம்மைக் களிக் கூரப்பண்ணுவார் என்று ஏசாயா 56:7 கூறுகிறது. நிஜமான ஜெபம் என்பது பரிச்சயமான சொற்களையும், சொற்றொடர் களையும் ஒப்பித்தல் அல்ல; அது, கர்த்தரிடம் நம் இருதயத்தையும் ஆவியையும் ஊற்றுவதாகும். "கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்," என்று இயேசு சொன்னார் (யோவான் 16:24). நிஜமான ஜெபம் விடுவிக்கிறதாகவும், அனுபவித்து மகிழக்கூடியதாகவும் இருக்கிறது.

கடைசியாக, நாம் ஐக்கியங்கொள்ளலாம். கிறிஸ்துவை நேசித்து, அவரை அனுபவித்துமகிழ்கிற மற்றவர்களுடன் சேர்ந்து இருப்பதே ஒரு கிறிஸ்தவனுக்கு மிகப்பெரிய அனுபவ மகிழ்ச்சியாகும். நாம் ஒன்றாக சேர்ந்து அவரைத் துதித்து, அவரைப்பற்றிப் பேசும்போது, நாம் அனுபவிக்கிற இனிமையை எந்த மனித வார்த்தைகளாலும் சொல்லமுடியாது. "நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ள வர்களாகும்படி... உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து வோடும் இருக்கிறது. உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இவைகளை உங்களுக்கு எழுதுகிறோம்," என்று 1 யோவான் 1:3-4 கூறுகிறது. நிஜமான ஐக்கியம் ஒரு கடமை அல்ல, அது ஓர் அனுபவமகிழ்ச்சி, பூமியில் மாபெரும் மகிழ்ச்சி ஆகும்.

ஆகவே, நம்மிடம் நம்முடைய இரட்சிப்பின் நிச்சயமும், பாதுகாப்பும், மகிழ்ச்சியும் இருக்கின்றன. இப்பேர்ப்பட்ட நிறைவான இரட்சிப்பிற்காக அவரைத் துதிப்போமாக!

அத்தியாயம் மூன்று

கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம்

உங்கள் சரீர உயிரை ஆதாரிப்பதற்கு, தண்ணீர், பிராணவாயு, உணவு, உடை, இருப்பிடம் போன்ற அடிப்படையான காரியங்கள் உங்களுக்குத் தேவை. மேலும், உங்கள் சரீரத்திற்கு ஓரளவு புரதச்சத்தும், உயிர்ச்சத்தும், கனிமச்சத்தும் தேவை. இவை யாவும் இல்லாமல், உங்கள் சரீர உயிர் மரித்துப்போகும், அல்லது குறைந்தபட்சம் அது அதிகப் பாடுபடும்.

உங்களுடைய ஆவிக்குரிய ஜீவனும் அப்படித்தான். உங்கள் சரீர உயிரைப்போலவே, உங்கள் ஆவிக்குரிய ஜீவனுக்கு சில அடிப்படை மூலக்கூறுகள் தேவை. இவைகள் அவசியமானவைகள். இவைகள் இல்லாமல், கிறிஸ்துவை அறியாத ஓர் உலகத்தில் கிறிஸ்தவனாக வாழ்வது உங்களுக்குக் கடினமாக இருக்கும். இந்த அடிப்படை மூலக்கூறுகளுள் ஒன்றுதான் கிறிஸ்துவின் இரத்தம்.

கிறிஸ்துவின் இரத்தம் உங்களுக்கு ஏன் தேவை? ஏனென்றால், அத்தியாவசியமாக, விழுந்துபோன மனிதனுக்கு மூன்று அடிப்படை பிரச்சனைகள் இருக்கின்றன. கிறிஸ்தவ னாக நீங்கள்கூட இன்னும் விழுந்துபோன மனித ஜீவனை சுமந்துக் கொண்டிருக்கிறீர்கள். எனவே நாளுக்கு நாள், இந்த மூன்று பிரச்சனைகளால் நீங்கள் இன்னும் வாதிக்கப்படலாம்.

இந்த மூன்று பிரச்சனைகளில் மூன்று சாரார் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள்: தேவன், நீங்கள், மற்றும் சாத்தான். தேவனிடத்தில், அடிக்கடி நீங்கள் பிரிவை உணர்கிறீர்கள். உங்களுக்குள்ளேயே, அடிக்கடி நீங்கள் குற்றவுணர்வை உணர்கிறீர்கள். மேலும் சாத்தானிடமிருந்து, அடிக்கடி நீங்கள் குற்றச்சாட்டை உணர்கிறீர்கள். தேவனிடமிருந்து பிரிவு, குற்றவுணர்வின் உணர்ச்சிகள், சாத்தானிடமிருந்து குற்றச் சாட்டுக்கள் ஆகிய இம்மூன்றும் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் மூன்று பெரிய பிரச்சனைகளாக இருக்கலாம். இவைகளை எப்படி மேற்கொள்ளமுடியும்? கிறிஸ்துவின் இரத்தத்தினால் மட்டுமே.

தேவனிடமிருந்து பிரிவு

ஆதாம் ஏதேன் தோட்டத்தில் பாவஞ்செய்தபோது, உடனே அவன் தேவனைவிட்டு மறைந்துகொண்டான். ஆதாம் பாவஞ்செய்வதற்குமுன்பு, அவன் தேவனை அனுபவித்து மகிழ்ந்தான், எந்நேரமும் அவருடைய பிரசன்னத்தில் இருந்தான்.

இருப்பினும், அவன் பாவஞ்செய்தபிறகு, அவன் ஒளிந்து கொண்டான். எப்போதும் பாவம் தேவனிடமிருந்து பிரிக்கப்படுவதை விளைவிக்கிறது.

ஒரு கிறிஸ்தவனாக நீங்கள்கூட இதை அனுபவிக்கக்கூடும். நீங்கள் ஏதோவொரு சிறிய பாவஞ்செய்தபிறகு, உங்களுக்கும் தேவனுக்கும் இடையே ஒரு மிகப்பெரிய பிரிவை உணர் கிறீர்கள். தேவன் நீதியுள்ளவராக இருப்பதால், அவரால் பாவங்களைப் பொறுத்துக்கொள்ளமுடியாது. இதைத்தான் தீர்க்கதரிசியாகிய ஏசாயா கூறினார்: "இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" *(ஏசா. 59:1-2).*

ஆதாம் பாவஞ்செய்தபின்பு, "ஆதாமே, நீ என்ன செய் திருக்கிறாய்?" என்று தேவன் சொல்லவில்லை. மாறாக, "ஆதாமே, நீ எங்கே இருக்கிறாய்?" என்று தேவன் சொன்னார். வேறு வார்த் தைகளில் சொல்வதானால், உங்களுடைய பாவங்கள் உங்களை அவரிடமிருந்து பிரிக்கிறது என்பதைவிட நீங்கள் என்ன பாவங் களைச் செய்திருக்கிறீர்கள் என்பதற்கு தேவன் அக்கறைப் படுவதில்லை. தேவன் உங்களை நேசிக்கிறார், ஆனால் அவர் உங்களுடைய பாவங்களை வெறுக்கிறார். உங்களுடைய பாவங்கள் நிலைத்திருக்கிறவரை, தேவன் விலகித்தான் இருக்கவேண்டும். இந்நிலைமையில், நீங்கள் தேவனைவிட்டுத் தூரமாக உணர்கிறீர்கள். தேவன் வருவதற்கு, பாவங்கள் போகவேண்டும்.

முழுப் பிரபஞ்சத்திலும் ஒரேவொரு காரியம் மட்டுமே பாவங்களை நீக்கமுடியும்—கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம். ஜெபமோ, அழுகையோ, சடங்காச்சாரமோ, பிராயச் சித்தமோ, இனி நன்றாக இருப்பேன் என்ற வாக்குறுதியோ, குற்றவுணர்வோ, கொஞ்சங் காலம் காத்திருத்தலோ ஆகிய ஒன்றுமில்லை, கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம் மட்டுமே பாவங்களை அகற்றமுடியும். "இரத்தஞ் சிந்துத லில்லாமல் மன்னிப்பு உண்டாகாது," என்று எபிரேயர் 9:22 கூறுகிறது.

இது யாத்திராகமத்தில் விளக்கிக்காட்டப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் மக்களுள் சிலர் எகிப்தியர்களைப்போல பாவமுள்ளவர்களாக இருந்திருக்கலாம். இருப்பினும், எகிப்து தேசத்தில் எல்லா முதற்பிறந்த பிள்ளைகளையும் கொல்லும்படி தேவன் தம் தூதனை அனுப்பினபோது, "உங்களுடைய

நன்னடத்தையை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்," என்று அவர் சொல்லவில்லை. இஸ்ரவேல் மக்கள் ஜெபிக்க வேண்டும் என்றோ, பிராயச்சித்தம் செய்யவேண்டும் என்றோ, நன்றாக நடந்துகொள்வதாக வாக்களிக்கவேண்டும் என்றோ தேவன் கோரவில்லை. இல்லை, பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்து, அதின் இரத்தத்தை தங்கள் வாசல்நிலைக்கால்களில் தெளிக்கும்படி தேவன் அவர்களுக்குக் கட்டளையிட்டார். "அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்," என்று அவர் சொன்னார் (யாத். 12:13). வீட்டில் எவ்வகையான மக்கள் இருக்கிறார்கள் என்பதை தேவன் பார்க்கவேயில்லை; அவர் இரத்தத்தைப் பார்த்தபோது, அவர் வெறுமனே கடந்துபோனார்.

அந்தப் பஸ்கா ஆட்டுக்குட்டி கிறிஸ்துவின் சித்திரமாக இருந்தது. யோவான் ஸ்நானகன் கர்த்தரை முதன்முறையாகக் கண்டபோது, "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி," என்று பிரகடனப்படுத்தினான் (யோவான் 1:29). இயேசுவே தேவ ஆட்டுக்குட்டி. அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தால் உங்களுடைய பாவங்களெல்லாம் நீக்கப்பட்டு விட்டன.

அப்படியானால், நீங்கள் பாவஞ்செய்து, தேவனைவிட்டுத் தூரமாக உணரும்போது, நீங்கள் என்ன செய்யவேண்டும்? நீங்கள் வெறுமனே அந்தப் பாவத்தைத் தேவனிடம் அறிக்கைசெய்யவும், இயேசுவின் இரத்தம் அந்தப் பாவத்தை நீக்கிவிட்டது என்பதை விசுவாசிக்கவும் வேண்டும். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்," என்று 1 யோவான் 1:9 கூறுகிறது. நீங்கள் உங்களுடைய பாவங்களை அறிக்கைசெய்யும்போது, உடனே உங்களுக்கும் தேவனுக்கும் இடையே உள்ள எல்லாத் தூரமும் போய்விடுகிறது.

இந்தக் குறிப்பைப்பற்றிய எந்த உணர்ச்சிக்காகவோ அல்லது உணர்ச்சியின்மைக்காகவோ கவலைப்படாதீர்கள். பிரதானமாக, கிறிஸ்துவின் இரத்தம் தேவனுடைய திருப்திக்காக இருக்கிறது, உங்களுடைய திருப்திக்காக அல்ல. "அந்த இரத்தத்தை நான் (நீங்கள் அல்ல) கண்டு," என்று தேவன் சொன்னதை ஞாபகம்வைத்திருங்கள். பஸ்காவின் இரவின்போது, இஸ்ரவேல் மக்கள் வீட்டிற்குள் இருந்தார்கள், ஆனால் ஆட்டுக்குட்டியின் இரத்தம் வீட்டிற்குவெளியே இருந்தது. வீட்டிற்குள் அவர்களால் இரத்தத்தைப் பார்க்கமுடிய வில்லை; இருந்தாலும், தேவன் அந்த இரத்தத்தினால் திருப்தியடைந்திருக்கிறார் என்பதை அறிந்ததின்மூலம் அவர்களுக்கு சமாதானம் இருந்தது.

வருடத்திற்கு ஒருமுறை, பாவநிவாரண நாளன்று, பெட்டியின்

கிருபாசன மூடியின்மேல் இரத்தத்தைத் தெளிக்க மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியன் தனியாகச் சென்றான் (லேவி. *16:11-17*). யாரும் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. இது கிறிஸ்துவுக்கு நிழலாக இருக் கிறது; இவர், தம் உயிர்த்தெழுதலுக்குப்பிறகு, பரலோக கூடாரத்திற்குள் சென்று, உங்களுடைய பாவங்களுக்கான சாந்தப்படுத்துதலாக தேவனுக்குமுன்பாக தம் சொந்த இரத்தத்தைத் தெளித்தார் (எபி. *9:12*). இன்று யாரும் பரலோகத்தை உற்றுநோக்கி, அந்த இரத்தத்தைப் பார்க்க முடியாது. இருப்பினும் அது அங்கே இருக்கிறது. அது அங்கே உங்களுக்காகப் பேசி (எபி. *12:24*), உங்களுக்குப் பதிலாக அது தேவனைத் திருப்திப்படுத்திக் கொண்டிருக்கிறது. நீங்கள் இரத்தத்தைப் பார்க்கமுடியாது என்றாலும், அதின் வீரியத்தில் நீங்கள் விசுவாசம்வைக்கமுடியும். இந்த இரத்தம் தேவனுக்கு நேராக உங்கள் பிரச்சனையைத் தீர்க்கிறது.

உங்களுடைய பாவங்களை அகற்ற கிறிஸ்துவின் இரத்தம் போதுமானது என்று தேவன் கணக்கிட்டால், நீங்களும் அவ்வாறே செய்யலாமா? அல்லது அதைத்தவிர ஏதோவொரு நல்ல உணர்ச்சியும் உங்களுக்குத் தேவையா? உங்களுடைய கோரிக்கை தேவனுடைய கோரிக்கையைவிட உயர்வாக இருக்கலாமா? இல்லை, "ஆ, தேவனே, கிறிஸ்துவின் இரத்தம் என்னுடைய எல்லாப் பாவங்களையும் நீக்கிவிட்டதற்காக உமக்கு நன்றி. இரத்தத்தினால் நீர் சந்தோஷம் அடைவீர் என்றால், நானும் சந்தோஷம் அடைவேன்," என்று நாம் எளிமையாய் அறிக்கைசெய்யவேண்டும்.

உங்களுடைய மனச்சாட்சியில் குற்றவுணர்வு

மனிதனுடைய இரண்டாவது முக்கியமான பிரச்சனை தன்னோடு இருக்கிறது. அவனுக்குள், அவனுடைய மனச் சாட்சியில், குற்றவுணர்வின் கனமான சுமை இருக்கிறது. இன்று எத்தனை வாலிபர்கள் குற்றவுணர்வினால் பாரமடைந்திருக் கிறார்கள்! குற்றவுணர்வு மனிதனுக்கு ஒரு பெரிய பிரச்சனை.

பாவங்கள், ஒருபக்கம், தேவனை பாதிக்கின்றன, மறுபக்கம், நம்மைத் தீட்டுப்படுத்துகின்றன. குற்றவுணர்வு என்பது என்ன? குற்றவுணர்வு என்பது உங்களுடைய மனச் சாட்சியில் பாவங்களின் கறையாகும். நீங்கள் வாலிபராக இருக்கும்போது, உங்கள் மனச்சாட்சி கொஞ்சம்தான் கறை பட்டிருக்கிறது. ஆனால் உங்களுக்கு வயதாகிக்கொண் டிருக்கும்போது, இந்தக் கறைகள் குவிந்துவிடுகின்றன. ஒருபோதும் கழுவப்படாத ஒரு ஜன்னல் கண்ணாடியைப் போல, கடைசியாக சிறிதளவு வெளிச்சம் மட்டுமே ஊடுருவும்வரை, மனச்சாட்சி அதிகமதிகமாக

இருளடைகிறது.

எந்த சோப்பும், எந்த இரசாயனமும், எந்த அமிலமும் குற்றவுணர்வின் கறையை உங்கள் மனச்சாட்சியிலிருந்து கழுவ முடியாது. ஓர் அணு குண்டுகூட இந்தக் கறையை அகற்ற முடியாது; இல்லை, இதைவிட அதிக வல்லமையுள்ள ஏதோவொன்றை உங்கள் மனச்சாட்சி கோருகிறது. உங்கள் மனச்சாட்சிக்கு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம் தேவை.

"...கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!" என்று எபிரேயர் 9:14 கூறுகிறது. எல்லாக் குற்றவுணர்விலிருந்தும் உங்கள் மனச்சாட்சியைச் சுத்திகரிப்பதற்கு, அல்லது சுத்த மாக்குவதற்கு கிறிஸ்துவின் இரத்தம் வல்லமையுள்ளது.

கிறிஸ்துவின் இரத்தம் உங்கள் மனச்சாட்சியிலிருந்து குற்றவுணர்வை எப்படி சுத்திகரிக்கிறது? நடைபாதையில் நீங்கள் வாகனத்தை நிறுத்தியதற்காக போக்குவரத்து அபராதச் சீட்டைப் பெறுகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். உங்களுக்கு மூன்று பிரச்சனைகள் இருக்கின்றன: முதலாவது, நீங்கள் சட்டத்தை மீறிவிட்டீர்கள்; இரண்டாவது, நீங்கள் அரசாங்கத்திடம் அபராதம் செலுத்த கடன்பட்டிருக்கிறீர்கள்; மூன்றாவது, அபராதத்தைக்குறித்து உங்களுக்கு ஞாபகப்படுத்த போக்குவரத்து அபராதச் சீட்டின் ஒரு பிரதி உங்களிடம் இருக்கிறது. இப்போது, நீங்கள் பணமில்லாதவராக இருக்கிறீர்கள், அபராதத்தைச் செலுத்தமுடியாமல் இருக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் வெறுமனே சீட்டை எறிந்துவிடமுடியாது; ஏனென்றால், போலீஸிடம் ஒரு பிரதி இருக்கிறது, நீங்கள் பணம்செலுத்தாவிட்டால் அவர்கள் உங்கள்மேல் வழக்குத் தொடுப்பார்கள். உங்களுக்கு நிஜமாகவே பிரச்சனை இருக்கிறது.

நீங்கள் பாவஞ்செய்கிறபோதெல்லாம் என்ன நடக்கிறது என்பதைப்பற்றிய ஒரு சித்திரம் இது. முதலாவது, நீங்கள் தேவனுடைய சட்டத்தை மீறிவிட்டீர்கள்; அதாவது, தேவனை பாதிக்கிற ஏதோவொன்றை செய்துவிட்டீர்கள். இரண்டாவது, நீங்கள் தேவனுடைய சட்டத்திற்கு ஏதோவொரு கடன் பட்டிருக்கிறீர்கள். பாவத்தின் சம்பளம் மரணம் என்று ரோமர் 6:23 கூறுகிறது. இது நிச்சயமாக நீங்கள் செலுத்துவதற்கு சாத்தியமற்ற கடுமையான அபராதம். மூன்றாவது, உங்கள் சட்டைப்பையில் உள்ள போக்குவரத்து அபராதச் சீட்டைப் போல, உங்கள் குற்றத்தைப்பற்றிய நச்சரிக்கிற ஞாபகப்படுத்துதலாக, உங்கள் மனச்சாட்சியில் குற்றவுணர்வு இருக்கிறது.

இப்போது இங்கு நற்செய்தி இருக்கிறது. இயேசுகிறிஸ்து

சிலுவையில் மரித்தபோது, உங்களுக்காக தேவனுடைய சட்டத்தின் எல்லாக் கோரிக்கைகளையும் அவருடைய மரணம் முழுமையாக நிறைவேற்றியது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், உங்களுடைய பாவத்தின் கடன் செலுத்தப்பட்டுவிட்டது. கர்த்தரைத் துதியுங்கள்! இயேசுகிறிஸ்து சிலுவையில் தம்முடைய மரணத்தின்மூலம் அவையெல்லாவற்றையும் செலுத்தினார்!

எனவே இப்போது, முதல் இரண்டு பிரச்சனைகள் தீர்க்கப் பட்டுவிட்டன: தேவன் இனி பாதிக்கப்படுவதில்லை, மற்றும் பாவத்தின் கடன் முழுவதுமாக செலுத்தப்பட்டுவிட்டது. ஆனால் உங்கள் மனச்சாட்சியைப்பற்றிய காரியம் என்ன? போக்குவரத்து அபராதச் சீட்டைப்போல, குற்றவுணர்வின் கறை உங்களுடைய பாவத்தின் பதிவேடாக நிலைத்திருக்கிறது.

இங்குதான் கிறிஸ்துவின் இரத்தம் உங்கள் மனச் சாட்சியைச் சுத்தமாக்குகிறது. கிறிஸ்துவின் மரணம் பாவத்தின் கடனை செலுத்தியிருப்பதால், அவருடைய இரத்தம் இப்போது அந்தக் கடனின் பதிவேட்டை துடைத்து அழிக்கமுடியும். அபராதம் செலுத்தப்பட்டவுடன், போக்குவரத்து அபராதச் சீட்டு கிழிக்கப்பட்டு, தூக்கியெறியப்படக் கூடியதுபோலவே, உங்களுடைய மனச்சாட்சியில் உள்ள எந்தக் குற்றவுணர்வும் துடைத்து அழிக்கப்படலாம்.

இதை அனுபவிப்பது மிக சுலபம். நீங்கள் பாவஞ்செய்து, உள்ளே குற்றவுணர்வை உணரும்போதெல்லாம், நீங்கள் எளிமையாய் தேவனிடம் திறந்து, இதுபோல ஜெபிக்கலாம்: "ஆ, தேவனே, இன்று நான் செய்ததற்காக என்னை மன்னியும். கர்த்தாவே, நீர் சிலுவையில் எனக்காக மரித்து, நான் செய்த இந்தப் பாவத்திற்கானதைச் செலுத்தினீர் என்பதற்காக உமக்கு நன்றி. கர்த்தாவே, இந்தப் பாவம் உம்மால் மன்னிக்கப்பட்டது என்று நான் விசுவாசிக்கிறேன். எந்தக் குற்றவுணர்வின் கறையிலிருந்தும் என் மனச் சாட்சியைச் சுத்தமாக்கும்படி இப்போதே உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை நான் கோருகிறேன்." 1 யோவான் 1:9-ஐ ஞாபகம்வைத்திருங்கள்: "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப் பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." மேலும், சங்கீதம் 103:12 கூறுகிறபடி, "மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார்." மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரம் என்று யாரால் சொல்ல முடியும்? அதேபோல, நீங்கள் உங்களுடைய பாவங்களை அறிக்கைசெய்யும்போது, தேவன் அவைகளை உங்களைவிட்டு

அளவற்ற தூரமாக்குகிறார். இனி அவைகளுக்கு உங்களோடு எந்த சம்பந்தமும் இல்லை. இதன் காரணமாக, உங்கள் மனச்சாட்சியில் உங்களுக்கு ஓய்வு இருக்கமுடியும்.

தேவன் மன்னிக்கும்போது, அவர் மறக்கிறார். தேவன் உங்களுடைய பாவங்களை மன்னித்தப்பின்பு, ஒருநாள் அவர் திரும்பிவந்து, மீண்டும் அவைகளைக்குறித்து உங்களுக்கு ஞாபகப்படுத்தலாம் என்று நினைக்காதீர்கள். இல்லை, மன்னிக்கப்பட்ட உங்களுடைய பாவங்களைப்பொறுத்தவரை, தேவனுக்கு மிகவும் குறுகிய ஞாபக சக்தியே இருக்கிறது. சிலவேளைகளில், தேவனைவிட சிறந்த ஞாபக சக்தி உங்களுக்கு இருக்கலாம். நிஜமாகவே தேவனால் மன்னிக்க முடியுமா? இதைத்தான் எரேமியா 31:34 கூறுகிறது: "நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்." தேவன் உங்கள் பாவங்களை மறக்கிறார் என்றால், நீங்களும் அவைகளை மறக்கலாம். தேவன் ஏற்கெனவே மறந்துவிட்ட ஒன்றை அவருக்கு ஞாபகப்படுத்தாதீர்கள்.

ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களுக்குமுன்பு கிறிஸ்து மரித்தார். அவருடைய இரத்தம் ஏற்கெனவே சிந்தப்பட்டது; அது உங்களுடைய மனச்சாட்சியைக் கழுவ ஒரு நாளுக்கு இருபத்து நான்கு மணிநேரமும் கிடைக்கக்கூடியதாக இருக் கிறது. நீங்கள் பாவஞ்செய்யும்போதெல்லாம், காத்திருக்கத் தேவையில்லை. காத்திருத்தல் இரத்தத்தின் வல்லமையை முன்னேற்றாது. இரத்தம் சர்வ வல்லமையுள்ளது. நீங்கள் எங்கு இருந்தாலும் சரி, நாளின் எந்த நேரத்திலும், நீங்கள் உங்களுடைய மனச்சாட்சியில் குற்றவுணர்வை உணர்ந்தால், வெறுமனே விலையேறப்பெற்ற இரத்தத்தைக் கோருங்கள். "எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ,...அவன் பாக்கியவான். எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ,...அவன் பாக்கியவான்" (சங். 32:1-2). கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின்மூலம், குற்றவுணர்வு என்னும் பிரச்சனை தீர்க்கப்படுகிறது.

சாத்தானிடமிருந்து குற்றச்சாட்டு

ஆயினும், சிலவேளைகளில், நீங்கள் அறிக்கைசெய்து, இரத்தத்தைப் பிரயோகித்தப்பிறகு, ஏதோவொரு கெட்ட உணர்ச்சி உங்களுக்குள் தொடர்ந்து இருக்கக்கூடும். உங்க ளுடைய பாவம் மன்னிக்கப்படவில்லை என்பதை இது குறிக் கிறதா? அல்லது கிறிஸ்துவின் இரத்தம் வேலைசெய்யவில்லை என்பதை இது குறிக்கிறதா? அல்லது கூடுதலாக ஏதோவொன்று தேவைப்படுகிறது என்பதை இது குறிக்கிறதா? "இல்லவே இல்லை!" என்றுதான் நீங்கள் பதிலளிக்கவேண்டும்.

அப்படியானால், நீங்கள் அறிக்கைசெய்து, இரத்தத்தைப்

பிரயோகித்தப்பிறகு, இந்தக் கெட்ட உணர்ச்சிகள் எங்கிருந்து வருகின்றன? தேவனுடைய எதிரியாகிய சாத்தானே இவை களின் ஊற்று. நாம் இதைப் புரிந்துகொள்வதற்கு, சாத்தான் யார் என்றும், அவன் என்ன செய்கிறான் என்றும் நாம் பார்க்கவேண்டும்.

சாத்தான் என்பவன் "பிசாசு"; வேதாகமத்தின் மூல மொழியில் இதின் அர்த்தம் "குற்றஞ்சாட்டுபவன்." எனவே, "...இரவும் பகலும் நம்முடைய தேவனுக்குமுன்பாக நம் முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன்..." என்று வெளிப்படுத்தின விசேஷம் *12:10* அவனைக் குறிப்பிடுகிறது. தேவனுடைய எதிரியாகிய சாத்தான் இரவும் பகலும் தேவனுடைய மக்களைக் குற்றஞ்சாட்டுவதற்கே தன்னுடைய நேரத்தைப் பெரும்பாலும் செலவிடுகிறான். இதுதான் அவனுடைய வேலை. நிச்சயமாக, இதைச் செய்யும்படி தேவன் அவனிடம் சொல்லவில்லை. மாறாக, இடைவிடாமல் தேவனுடைய மக்களைக் குற்றஞ் சாட்டுவதை அவன் தானாகவே தன்மீது எடுத்துக்கொண்டான்.

இது யோபுவின் கதையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. யோபு நீதிமானாக இருந்தான், தேவனுக்குப் பயந்தான் (யோபு *1:1*). இருப்பினும், தேவனுக்குமுன்பாக யோபுவைக் குற்றஞ்சாட்டும்படி சாத்தான் அவருக்குமுன்பாகத் தோன்றினான் என்று பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. "யோபு விருதாவாகவா தேவனுக்குப் பயந்து நடக்கிறான்?...அவன் கைகளின் கிரியையை ஆசீர்வதித்தீர்; அவனுடைய சம்பத்து தேசத்தில் பெருகிற்று. ஆனாலும் உம்முடைய கையை நீட்டி அவனுக்கு உண்டானவையெல்லாம் தொடுவீரானால், அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும்," என்று அவன் சொன்னான் (யோபு *1:9-11*). வேறு வார்த்தைகளில் சொல்வதானால், தேவன் யோபுவை ஆசீர் வதித்ததால்தான் அவன் தேவனுக்குப் பயப்படுகிறான் என்று சாத்தான் அவனைக் குற்றஞ்சாட்டினான். தேவன் யோபுக்கு இலஞ்சம் கொடுத்தார் என்றும், தேவன் யோபுவின் செல்வங்களையெல்லாம் எடுத்துக்கொண்டாரானால், யோபு தேவனை சபிப்பான் என்றும் சாத்தான் வலியுறுத்தினான். ஆவிக்குரிய மண்டலத்தில் சாத்தானுடைய குற்றஞ் சாட்டுதலை இது விளக்கிக்காட்டுகிறது.

சகரியாவின் புத்தகத்தில், பிரதான ஆசாரியனாகிய யோசுவா தேவனுக்குமுன்பாக நின்றான், சாத்தான் "அவனுக்கு விரோதஞ்செய்ய" அவனுடைய வலதுபக்கத்தில் நின்றான் (*3:1*). யோசுவா "அழுக்கு வஸ்திரம் தரித்தவனாய்" இருந்தான் (வ. *3*). இது அவனுடைய தரித்திரமான, பாவமுள்ள நிலைமையைப்பற்றிப் பேசுகிறது. எத்தனைமுறை உங்களைக் குற்றஞ்சாட்டும்படி உங்களுடைய தரித்திரமான நிலைமை சாத்தானுக்கு வாய்ப்பைக்

கொடுக்கிறது. சாத்தான் தேவனுடைய எதிரி மட்டுமல்ல, அவன் உங்களுடைய எதிரி யாகவும் இருக்கிறான் என்பதை இது மறைவாகச் சுட்டிக்காட்டுகிறது. நீங்கள் தேவனிடம் வரும்போதெல்லாம், சாத்தான் உங்களைக் குற்றப்படுத்துவதால் உங்களுடைய வருகையை எதிர்க்கிறான்.

குற்றச்சாட்டைவிட அதிகமாக வேறு எதுவும் ஆவிக்குரிய ரீதியில் ஒரு கிறிஸ்தவனை முடமாக்குவதில்லை. நீங்கள் சாத்தானுடைய குற்றச்சாட்டைக் கேட்கும்போதெல்லாம், நீங்கள் வலுவற்றவர்களாகிவிடுகிறீர்கள். அது உங்களுடைய ஆவியிலிருந்து எல்லா பலமும் காலியாக்கப்படுவதுபோல இருக்கிறது. குற்றச்சாட்டின்கீழ் இருக்கிற ஒரு கிறிஸ்தவனுக்கு மற்றவர்களுடன் ஐக்கியங்கொள்வது கடினமாக இருக்கிறது, ஜெபிப்பது அதைவிட கடினமாக இருக்கிறது. அவன் தன்னால் தேவனை அணுகமுடியாததுபோல உணர்கிறான்.

இது எதிரியின் தந்திரம். அவன் "நான்தான் பிசாசு! இப்போது நான் உன்னைக் குற்றப்படுத்தப்போகிறேன்!" என்று கூக்குரலிட்டு, முள்கரண்டியுடன் சிவப்பு அங்கியில் தோன்றுவதில்லை. அவன் அதைவிட அதிக புத்திசாலியாக இருக்கிறான். அவன் உங்களை உள்ளாகக் குற்றஞ்சாட்டுகிறான், அவனுடைய குற்றச்சாட்டுகளைத் தேவனுடைய பேசுதலாக எண்ணும்படியாகவும்கூட உங்களை ஏமாற்றுகிறான்.

உங்களுடைய மனச்சாட்சியில் தேவனுடைய மெய்யான பிரகாசிப்பித்தலையும், சாத்தானுடைய குற்றச்சாட்டையும் நீங்கள் எப்படி வேறுபடுத்திப் பார்க்கமுடியும்? சிலவேளைகளில் அது கடினமாக இருக்கிறது, ஆனால் மூன்று வழிகள் இருக்கின்றன:

முதலாவது, தேவனுடைய வெளிச்சம் உங்களுக்கு நிரப்பீட்டை வழங்குகிறது, ஆனால் சாத்தானுடைய குற்றச்சாட்டு உங்களை காலியாக்கிவிடுகிறது. தேவன் உங்களுடைய பாவங்களைப்பற்றிப் பேசும்போது, நீங்கள் மிக அம்பலமாக்கப்பட்டவர்களாகவும், காயப்பட்டவர்களாகவும் உணரலாம். இருந்தாலும், நீங்கள் நிரப்பப்படுகிறீர்கள், தேவனிடம் நெருங்கி வந்து, கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தைப் பிரயோகிக்கும்படி ஊக்கமும் அடைகிறீர்கள். மறுபக்கத்தில், சாத்தானுடைய குற்றச்சாட்டுகள் மொத்தத்தில் எதிர்மறையானவைகள். நீங்கள் எவ்வளவு அதிகமாகக் கேட்கிறீர்களோ, ஜெபிப்பதற்கு அவ்வளவு கடினமாக இருக்கிறது. நீங்கள் வெறுமையாகவும், சோர்வாகவும் உணர்கிறீர்கள்.

இரண்டாவது, தேவனுடைய பேசுதல் எப்போதும் குறிப்பாக இருக்கிறது, ஆனால் சாத்தானுடைய குற்றப்படுத்துதல் பலவேளைகளில் (எப்போதுமே இல்லாவிட்டாலும்) பொது வாக இருக்கிறது. சிலவேளைகளில், நீங்கள் களைப்படைந் திருப்பதாக

அல்லது இன்று மோசமான நாளாக இருந்ததாக எண்ணும்படி ஏமாற்றப்படக்கூடும். வேறு சிலவேளைகளில், நீங்கள் தேவனிடம் சரியாக இல்லை என்ற ஒரு பொதுவான எண்ணம் உங்களுக்கு இருக்கிறது. ஆனால் நீங்கள் உங்க ளுடைய மனச்சாட்சியை ஆராயும்போது, தேவனிடமிருந்து உங்களைப் பிரிந்திருக்கச்செய்கிற குறிப்பான பாவம் எதையும் நீங்கள் காண்பதில்லை. அல்லது ஒரு பொதுவான மனச்சோர்வின் உணர்ச்சியோடு அல்லது தேவனிடத்தில் ஓர் அமைதியற்ற உணர்ச்சியோடு நீங்கள் காலையில் எழும்பலாம். வெளிப்படையாக பாவத்தை ஊற்றாகக் கொண்டிராத இந்தக் குற்றப்படுத்துதலின் எல்லாப் பொதுவான உணர்ச்சிகளும் சாத்தானுடையவை ஆகும், அவைகள் புறக்கணிக்கப்பட வேண்டும். தேவன் பேசும்போது, அவர் குறிப்பாகவும், நேர்மறையாகவும் பேசுகிறார். ஆனால் சாத்தான் பேசும்போது, பலவேளைகளில் அவன் பொதுவாகவும், எதிர்மறையாகவும் பேசுகிறான்.

மூன்றாவது, நீங்கள் அறிக்கைசெய்து, இரத்தத்தை உரிமைக்கோரினபிறகு தொடர்ந்து இருக்கிற எந்த அமைதி யற்ற உணர்ச்சியும் சாத்தானுடையவை ஆகும். மீண்டும் அறிக்கைசெய்து, இரத்தத்தை உரிமைக்கோருவதற்கு எந்த அவசியமும் இல்லை. தேவனுடைய கோரிக்கை இரத்தத்தினால் உடனடியாகத் திருப்தியாக்கப்படுகிறது. ஆனால் சாத்தான் ஒருபோதும் திருப்தியடைவதில்லை. நீங்கள் மீண்டும் மீண்டும் அறிக்கைசெய்வதை அவன் பார்க்க விரும்புகிறான். "அடைமழைநாளில் ஓயாத ஒழுக்கும் சண்டைக்காரியான ஸ்திரீயும் சரி," என்று நீதிமொழிகள் 27:15 கூறுகிறது. சாத்தானுடைய குற்றச்சாட்டுகள் அப்படித் தான், ஒழுகுகிற குழாயைப்போல அல்லது நச்சரிக்கிற மனைவியைப்போல, அவைகள் உங்களைத் தூங்கவிடாது. ஆனால் தேவனுடைய பேசுதல் வித்தியாசமானது. நீங்கள் அறிக்கைசெய்து, இரத்தத்தின் கழுவுதலை உரிமைக்கோரும் போது, தேவன் உடனடியாகத் திருப்தியடைகிறார். எந்தக் கூடுதலான குரலும் சாத்தானுடையதாகும்.

நீங்கள் உங்களுடைய பாவத்தை அறிக்கைசெய்து, விலையேறப்பெற்ற இரத்தத்தை உரிமைக்கோரினாலும், ஏதோவொரு அமைதியின்மை உங்களுக்குள் உங்களை வலிந்து இழுக்கிறது என்றால், உடனே நீங்கள் ஜெபிப்பதை நிறுத்திவிடவேண்டும். அதற்குமேல் அறிக்கைசெய்யாதீர்கள். அதற்குப் பதிலாக, குற்றச்சாட்டின் ஊற்றிடம் திரும்பி, இதுபோல சொல்லுங்கள்: "சாத்தானே, நான் என் பாவத்தைத் தேவனிடம் அறிக்கைசெய்துவிட்டேன். அவர் என் பாவத்தை மன்னித்துவிட்டார், இயேசுகிறிஸ்துவின் இரத்தம் அதிலிருந்து என்னைச்

சுத்தமாக்கிவிட்டது. இப்போது நான் உணர்கிற இந்த அமைதியின்மை தேவனிடமிருந்து வரவில்லை; இது உன்னிடமிருந்து வந்தது, நான் இதைப் புறக்கணிக்கிறேன்! சாத்தானே, இப்போது நீ கிறிஸ்துவின் இரத்தத்தைப் பார்க்க வேண்டும். உன்னுடைய குற்றச்சாட்டுகள் ஒவ்வொன்றுக்கும் அந்த இரத்தம் பதில்சொல்லுகிறது." சாத்தானிடம் இவ்விதமாகப் பேசிப்பாருங்கள். இவ்விதமாக நீங்கள் இரத்தத்தைப் பயன்படுத்தும்போது, சாத்தான் தோற்கடிக்கப்படுகிறான், அவன் அதை அறிந்திருக்கிறான். "...நம்முடைய சகோதரர்கள் மேல்...குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான்.... ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்," என்று வெளிப்படுத்தின விசேஷம் *12:11* கூறுகிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் எல்லாப் பாவத்திலிருந்து உங்களைச் சுத்தமாக்கிவிட்டது என்றும், இந்த இரத்தம் சாத்தானைத் தோற்கடித்துவிட்டது என்றும் நீங்கள் பறைசாற்றுவதே உங்களுடைய சாட்சியின் வசனமாகும். இவ்விதமாக நீங்கள் தைரியமாகப் பேசும்போது, சாத்தானுடைய குற்றச்சாட்டுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கிறிஸ்தவ வாழ்க்கை ஒருவிதமான யுத்தமாகும். சாத்தான், அதாவது "உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" (1 பேதுரு 5:8). இந்த யுத்தத்திற்காக, உங்களுக்கு நேர்த்தியான ஆயுதங்கள் தேவை. நீங்கள் பயன்படுத்தவேண்டிய ஒரு முக்கியமான ஆயுதம் கிறிஸ்துவின் இரத்தமாகும்.

தேவனுடைய பிரசன்னத்தினால் நிறைந்த அனுதின வாழ்க்கை

கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் வல்லமை யால், ஒரு கிறிஸ்தவன் ஒவ்வொரு கணப்பொழுதும் தேவனுடைய பிரசன்னத்தில் வாழ்வது சாத்தியம். எப்போதெல்லாம் ஏதோவொரு சிறிய பாவம் தேவனோடுள்ள உங்கள் ஐக்கியத்தைத் தடைசெய்ய வருகிறதோ, அப்போதெல்லாம் உடனடியாக நீங்கள் அறிக்கைசெய்து, கர்த்தருடைய மேலோங்கும் இரத்தத்தை உரிமைக்கோரலாம். உடனே ஐக்கியம் ஆதிநிலைக்குத் திருப்பப்படுகிறது. நீங்கள் ஏன் நேரத்தை வீணாக்கவேண்டும்? ஒவ்வொரு கணப்பொழுதும், ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவின் இரத்தம் எளிதாகக் கிடைக்கிறது. கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் சுத்தமாக்கும் வல்லமையை நீங்கள் காலிசெய்யவே முடியாது. அவருடைய இரத்தம் உங்களுடைய ஒவ்வொரு கடந்தகால பாவத்தை மட்டுமல்ல, எக்காலத்திலும் நீங்கள் செய்யக்கூடிய

எல்லாப் பாவத்தையும்கூட சுத்தமாக்க வல்லது.

கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் வல்லமையால், குற்றவுணர்வின் கறையிலிருந்து விடுபட்ட மனச்சாட்சியை நீங்கள் அனுபவித்துமகிழலாம். இதனால், நீங்கள் தைரியமாகத் தேவனிடம் வரமுடியும். "துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும்,...உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்" (எபி. 10:22). கிறிஸ்துவின் இரத்தத்தினால், உங்களுடைய மனச்சாட்சி குற்றவுணர்விலிருந்து விடுபட்டிருக்கமுடியும். புதிதாகக் கழுவப்பட்ட ஜன்னல் கண்ணாடி யைப்போல, அது தெளிவாகவும், பிரகாசமாகவும், வெளிச்சத் தால் நிறைந்ததாயும் இருக்கமுடியும்.

கடைசியாக, கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் வல்லமையால், சாத்தானுடைய ஒவ்வொரு குற்றச்சாட்டையும் நீங்கள் மேற்கொள்ளமுடியும். அவனுடைய குற்றச்சாட்டுகள் பலமாக இருந்தாலும், கிறிஸ்துவின் இரத்தம் அதைவிட பலமானது. இது அவைகள் ஒவ்வொன்றுக்கும் பதில்சொல்லுகிறது. இந்த இரத்தம் உங்களுடைய ஆயுதம். இந்த ஆயுதம் இருக்கும்போது, நீங்கள் சாத்தானால் தோற்கடிக்கப்படவே முடியாது; மாறாக, அவன் உங்களால் தோற்கடிக்கப்படுவான்.

கிறிஸ்துவின் இரத்தம் என்னே பிரியமானது, என்னே விலையேறப்பெற்றது! இந்த இரத்தத்தினால் தினம்தினம் தேவனுடைய பிரசன்னத்தில் உங்களால் வாழமுடியும்.

> *"அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்."*
>
> *(1 யோவான் 1:7)*

அத்தியாயம் நான்கு

கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிடுதல்

கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிடுவது என்பதின் பொருள் என்ன? கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதும், அவரிடம் ஜெபிப்பதும் ஒன்றுதான் என்று சில கிறிஸ்தவர்கள் எண்ணுகிறார்கள். ஆம், கூப்பிடுவது ஒருவகையான ஜெபம்தான். ஆனால் அது வெறுமனே ஜெபம் மட்டுமல்ல. எபிரேய மொழியில் கூப்பிடுவது என்ற வார்த்தை, வெளிப்படையாக 'நோக்கிக் கூப்பிடுவது,' 'நோக்கிக் கூவி அழைப்பது,' 'உரத்துக் கூக்குரலிடுவது' என்று பொருள்படும். கிரேக்க மொழியில் கூப்பிடுவது என்ற வார்த்தை 'ஒரு நபரை அழைப்பது,' 'ஒரு நபரைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவது,' என்று பொருள்படும். அதாவது, கேட்கும்படியாக ஒரு நபரைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவது. ஜெபிப்பது ஓசையின்றி அமைதியாக இருக்கலாம். ஆனால் கூப்பிடுவது கேட்கும்படியாகத்தான் இருக்கவேண்டும்.

கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவது என்பதின் பொருள் என்ன என்பதை நாம் காண பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் இருவர் உதவுகிறார்கள். கர்த்தரை நோக்கிக் கூப்படுவது என்றால் அவரை நோக்கிக் கூவி அழைப்பது என்றும், ஆவிக்குரிய சுவாசத்தை அனுபவிப்பது என்றும் எரேமியா சொல்கிறார். "மகா ஆழமான கிடங்கிலிருந்து, கர்த்தாவே, உம்முடைய நாமத்தை நோக்கிக் கூப்பிட்டேன். என் சத்தத்தைக் கேட்டீர்; என் பெருமூச்சுக்கும் என் கூப்பிடு தலுக்கும் உமது செவியை அடைத்துக் கொள்ளாதேயும்" (புலம்பல் 3:55, 56). கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவது என்றால் நாம் அவரை நோக்கிக் கூவி அழைப்பதுதான் என்று ஏசாயாவும் சொல்கிறார். "இதோ, தேவனே என் இரட்சிப்பு; நான் பயப்படாமல் நம்பிக்கையாயிருப்பேன்; கர்த்தராகிய யேகோவா என் பெலனும், என் கீதமுமானவர்; அவரே எனக்கு இரட்சிப்புமானவர். நீங்கள் இரட்சிப்பின் ஊற்றுகளிலிருந்து மகிழ்ச்சியோடே தண்ணீர் மொண்டுகொள்வீர்கள். அக்காலத்திலே நீங்கள் சொல்வது: கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நாமத்தை நோக்கிக் கூப்பிடுங்கள்;...கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்,... சீயோனில் வாசமாயிருக்கிறவளே, நீ கெம்பீர சத்தமிட்டுக் கூவி அழை; இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவராயிருக்கிறார்" (ஏசா. 12:2-6). தேவன் எப்படி நம் இரட்சிப்பாகவும், நம் பெலனாகவும், நம் கீதமாகவும் மாறமுடியும்? நாம் எப்படி இரட்சிப்பின் ஊற்று களிலிருந்து மகிழ்ச்சியோடே தண்ணீர் மொண்டுகொள்ள முடியும்? இதற்கு வழி, அவருடைய

பெயரை நோக்கிக் கூப்பிடுவதும், கர்த்தரைத் துதிப்பதும், கீர்த்தனம் பாடுவதும், கெம்பீர சத்தமிட்டுக் கூவி அழைப்பதுமே. இவை அனைத்தும் நான்காம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கூப்பிடுவதுடன் ஒத்திருக்கின்றன.

பழைய ஏற்பாட்டில் கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிடுதல்

கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவது மனுக்குலத்தின் மூன்றாம் தலைமுறையில் சேத்தின் குமாரனாகிய ஏனோஸிடத்தில் தொடங்கினது (ஆதி. *4:26*). ஆபிரகாம் (ஆதி. *12:8*), ஈசாக்கு (ஆதி. *26:25*), மோசே (உபா. *4:7*), யோபு (*12:4*), யாபேஸ் (*1* நாளா. *4:10*), சிம்சோன் (நியா. *16:28*), சாமுவேல் (*1* சாமு. *12:18*), தாவீது (*2* சாமு. *22:4*), யோனா (*1:6*), எலியா (*1* இராஜா. *18:24*) எரேமியா (புல. *3:55*) ஆகியோர் வழியாய்க் கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிடுவதின் வரலாறு வேதம் எங்கும் தொடர்ந்தது. பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டது மல்லாமல் மற்றவர்களும் அவருடைய பெயரை நோக்கிக் கூப்பிடு வார்கள் என்று தீர்க்கதரிசனமும் உரைத்தார்கள் (யோவேல் *2:32*; செப். *3:9*; சக. *13:9*). பரிசுத்த ஆவியைக்குறித்த யோவேலின் தீர்க்கதரிசனம் அநேகருக்குத் தெரியும்; ஆனால் அப்படி ஊற்றப்பட்டப் பரிசுத்த ஆவியை நாம் பெற்றுக் கொள்ள, நாம் கர்த்தரை நோக்கிக் கூப்பிட வேண்டும் என்ற உண்மைக்கு அநேகர் கவனம் செலுத்தியதில்லை. ஒருபுறம், தேவன் அவருடைய ஆவியை ஊற்றுவார் என்று யோவேல் தீர்க்கதரிசனம் உரைத்தார்; மறுபுறம், மக்கள் கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிடுவார்கள் என்று அவர் தீர்க்கதரிசனம் உரைத்தார். இந்தத் தீர்க்கதரிசனம் பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறினது (அப். *2:17, 21*). தேவனுடைய பொழிதலுக்கு அவரை நோக்கிக் கூப்பிடுவதான நம் ஒத்துழைப்பு தேவைப் படுகிறது.

புதிய ஏற்பாட்டு விசுவாசிகளால் பயிற்சிசெய்யப்பட்டது

பெந்தெகொஸ்தே நாள் தொடங்கி கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிடுவது புதிய ஏற்பாட்டு விசுவாசிகளால் பயிற்சிசெய்யப்பட்டது (அப். *2:21*). ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்படுகையில் கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிட்டான் (அப். *7:59*). புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதைப் பயிற்சிசெய்தார்கள் (அப். *9:14*; *22:16*; *1* கொரி. *1:2*; *2* தீமோ. *2:22*). தர்சு பட்டணத்தானாகிய சவுல் கர்த்தருடைய பெயரைக் கூப்பிடுகிற எல்லாரையும் கட்டும்படி பிரதான

ஆசாரியரிடம் இருந்து அதிகாரம்பெற்றான் (அப். 9:14). ஆதியிலே எல்லாப் பரிசுத்தவான்களும் இயேசுவைக் கூப்பிடுகிறவர்களாய் இருந் தார்கள் என்பதையே இது காட்டுகிறது. அவர்கள் கர்த்த ருடைய பெயரை நோக்கிக் கூப்பிட்டது, அவர்கள் கிறிஸ்த வர்கள் என்பதற்கு ஓர் அடையாளமாக, ஓர் அறிகுறியாக இருந்தது. நாம் கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிடுகிற வர்களாய் மாறினால் நம் கூப்பிடுதல் நம்மைக் கிறிஸ்தவர்கள் என்று இனங்காட்டும்.

அப்போஸ்தலராகிய பவுல் ரோமருக்கு எழுதின புத்த கத்திலே கூப்பிடுகிற இந்தக் காரியத்தை வலியுறுத்தினார். "யூதனென்றும், கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார். ஆதலால் கர்த்தருடைய நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்," (ரோமர் 10:12-13) என்று பவுல் சொன்னார். "எங்களுக்கும், தங்களுக்கும் ஆண்டவரா யிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை நோக்கி எங்கும் கூப்பிடுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது" (1 கொரி. 1:2) என்று 1 கொரிந்தியிரில் எழுதும்போதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதைப்பற்றித்தான் பேசினார். மேலும் 2 தீமோத்தேயுவில் "பரிசுத்த இருதயத்தோடே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுடனே ஆவிக்குரிய காரியங்களை அடையும்படி நாட வேண்டும்" என்று அவர் தீமோத்தேயுவுக்குச் சொன்னார் (2 தீமோ. 2:22). முதல் நூற்றாண்டிலே கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிடுவதை மிக அதிகமாகப் பயிற்சிசெய்தார்கள் என்பதை இவ்வசனங்களிலிருந்து காண்கிறோம். ஆகையால் பழைய ஏற்பாடு எங்கிலும், அதேபோல் கிறிஸ்தவ யுகத்தின் ஆதி நாட்களிலும் பரிசுத்தவான்கள் கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிட்டார்கள். இந்தக் காரியம் பெரும்பாலான கிறிஸ்தவர்களால் இவ்வளவு காலமாய்ப் புறக்கணிக்கப்பட்டது எவ்வளவு வேதனைக்குரியது! அவருடைய பெயரை நோக்கிக் கூப்பிடுவதை நாம் திரும்பப் பெறவும், அவருடைய ஜீவனிலுள்ள ஐசுவரியங்களை நாம் அனுபவித்து மகிழும்படி அதைப் பயிற்சிசெய்யவும் கர்த்தர் இன்று விரும்புகிறார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

கூப்பிடுவதின் குறிக்கோள்

நாம் ஏன் கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிட வேண்டும்? இரட்சிக்கப்படுவதற்கு மனிதர்கள் கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிட வேண்டும் (ரோமர் 10:13). ஓசையின்றி அமைதியாக ஜெபிக்கும் முறை ஜனங்கள் இரட்சிக்கப்பட உதவத்தான் செய்கிறது. ஆனாலும் அவ்வளவு செழிப்பான

உதவியில்லை. சத்தமிட்டுக் கூப்பிடும் முறையானது ஐசுவரியமாகவும் முற்றிலுமாகவும் ஜனங்கள் இரட்சிக்கப்பட அவர்களுக்கு உதவுகிறது. இப்படி இருப்பதால் ஜனங்கள் தங்களையே திறந்து கர்த்தராகிய இயேசுவின் பெயரை நோக்கிக் கூப்பிடும்படிக்கு நாம் ஊக்குவிக்க வேண்டும். கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதால் நாம் அவரு டைய இரட்சிப்பில் பங்குபெறலாம் என்று சங்கீதம் 116 சொல்கிறது. "இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு கர்த்தருடைய நாமத்தைக் கூப்பிடுவேன்" (வசனம் 13). இந்த ஒரே சங்கீதத்தில் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவது நான்கு முறை குறிப்பிடப்பட்டுள்ளது (வசனம் 2, 4, 13, 17). நாம் முன்பே பார்த்தபடி இரட்சிப்பின் ஊற்றுகளிலிருந்து தண்ணீர் மொண்டுகொள்வதற்கான வழி கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிடுவதுதான் (ஏசா. 12:2-4). அநேகக் கிறிஸ்தவர்கள் ஒருபோதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவது இல்லை. நீ ஒருபோதும் கூப்பிட்டதுமில்லை, கர்த்தருக்கு முன்பாக சத்தமிட்டதுமில்லை என்றால் நீ கர்த்தரை ஐசுவரிய சம்பன்னராய் அனுபவித்து மகிழ்ந்திருக்கிறாயா என்பது சந்தேகமே! "அவருடைய நாமத்தை நோக்கிக் கூப்பிடு. கெம்பீர சத்தமிட்டுக் கூவி அழை" (ஏசா. 12:4, 6). அவருக்கு முன்பாக சத்தமிட முயற்சிசெய். கர்த்தர் உனக்கு என்னவாக இருக்கிறார் என்பதைப்பற்றி நீ ஒருபோதும் சத்தமிட்டதில்லை என்றால், அதைச் செய்துபார். "ஆ கர்த்தராகிய இயேசுவே, நீர் எனக்கு மிகவும் நல்லவராயிருக்கிறீர்!" என்று எவ்வளவு அதிகமாய் நீ கெம்பீர சத்தமிடுகிறாயோ, அவ்வளவுக்கதிகமாய் உன் சுயத்திலிருந்து விடுபட்டு கர்த்தரால் நிரப்பப் படுவாய். ஆயிரக்கணக்கான பரிசுத்தவான்கள் கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிடுவதின்மூலமாய் விடுவிக்கப்பட்டும் செழிப்பாக்கப்பட்டும் இருக்கிறார்கள்.

கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதற்கு இன்னொரு காரணம், நெருக்கத்திலிருந்தும் (சங். 18:6; 118:5), ஆபத்திலிருந்தும் (சங். 50:15; 86:7; 81:7), துக்கத்திலிருந்தும், வேதனையி லிருந்தும் (சங். 116:3-4) விடுவிக்கப்பட்டுவதற்கு. கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதற்கு விரோதமாய் விவாதம்பண்ணியிருக்கிறவர்கள் கூட, தங்களுக்கு ஓர் ஆபத்தோ சுகவீனமோ நேரிடும்போது தாங்களாகவே அவரை நோக்கிக் கூப்பிடுவதைக் கண்டிருக் கிறார்கள். நம் வாழ்க்கையில் எந்தவித ஆபத்தும் இல்லாதபோது கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதற்கு விரோதமாய் நாம் விவாதிக்கலாம். ஆனால் ஆபத்து வரும்போது அவரை நோக்கிக் கூப்பிடு என்று யாரும் நமக்குச் சொல்ல வேண்டியதில்லை. நாமாகவே கூப்பிடுவோம்.

மேலும், கர்த்தருடைய ஏராளமான இரக்கத்தில் நாம் பங்கு

பெறுவதற்கு வழி, அவரை நோக்கிக் கூப்பிடுவதே. எவ்வளவு அதிகமாக நாம் அவரை நோக்கிக் கூப்பிடுகிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் அவருடைய இரக்கத்தை அனுபவித்துமகிழ்கிறோம் (சங். 86:5). கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதற்கு இன்னொரு காரணம், ஆவியானவரைப் பெறுவதற்கு (அப். 2:11, 21). பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதற்கு மிகச்சிறந்த, மிக எளிய வழி கர்த்தராகிய இயேசுவின் பெயரை நோக்கிக் கூப்பிடுவதே. ஆவி ஏற்கனவே ஊற்றப்பட்டாயிற்று. நாம் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதின்மூலம் அவரைப் பெற்றுக்கொள்ள வேண்டும், அவ்வளவே.

"ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும், பாலும் கொள்ளுங்கள்," என்று ஏசாயா 55:1 சொல்கிறது. கர்த்தரைப் புசிக்கவும், குடிக்கவும் என்ன வழி? இதே அதிகாரத்தில் 6-ஆம் வசனத்தில் ஏசாயா வழியைக் காட்டுகிறார்: "கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்." இப்படியாக, நாம் திருப்தியாக ஆவிக்குரிய ஆகாரத்தைப் புசிப்பதற்கு வழி, கர்த்தரைத் தேடுவதும், அவருடைய பெயரை நோக்கிக் கூப்பிடுவதுமே ஆகும்.

"எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மை நோக்கிக் கூப்பிடும் யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார்" என்று ரோமர் 10:12 சொல்கிறது. கர்த்தருடைய ஐசுவரியங்களை அனுபவித்துமகிழ்வதற்கான வழி அவரை நோக்கிக் கூப்பிடுவதே. கர்த்தர் ஐசுவரிய சம்பன்னராக மட்டுமில்லாமல், நம் அருகில் இருக்கிறவராயும், எளிதில் கிடைக்கிறவராயும் இருக்கிறார்; ஏனென்றால் அவர் ஜீவன் தருகிற ஆவியானவராக இருக்கிறார் (1 கொரி. 15:45). ஆவியாக அவர் எங்கும் வியாபித்திருக்கிறார். நாம் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் அவரை நோக்கிக் கூப்பிடலாம். நாம் அவரை நோக்கிக் கூப்பிடும்போது அவர் ஆவியாக நம்மிடத்தில் வருகிறார், நாம் அவருடைய ஐசுவரியங்களை அனுபவித்துமகிழ்கிறோம்.

கொரிந்தியருக்கு எழுதிய முதல் நிருபம் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்வதைப்பற்றிய ஒரு புத்தகம். அதின் பன்னிரண்டாம் அதிகாரத்தில் கிறிஸ்துவை எப்படி அனுபவித்துமகிழ்வது என்று பவுல் சொல்கிறார். கர்த்தரை அனுபவித்துமகிழ்வதற்கான வழி அவருடைய பெயரை நோக்கிக் கூப்பிடுவதுதான் (12:3; 1:2). நாம் எப்போதெல்லாம் "கர்த்தராகிய இயேசுவே" என்று கூப்பிடுகிறோமோ, அப்போதெல்லாம் அவர் ஆவியாக வருகிறார், ஜீவன் தருகிற ஆவியாகிய அவரை நாம்

பருகுகிறோம் *(12:13)*. நான் ஒரு நபருடைய பெயரைக் கூப்பிட்டால், அந்த நபர் நிஜமானவ ராகவும், ஜீவிக்கிறவராகவும், பிரசன்னராகவும் இருந்தால், அவர் என்னிடத்தில் வருவார். கர்த்தராகிய இயேசு நிஜமானவராகவும், ஜீவிக்கிறவராகவும், பிரசன்னராகவும் இருக்கிறார்! அவர் எப்போதும் கிடைக்கக்கூடியவராக இருக்கிறார்! நாம் கூப்பிடும்போதெல்லாம் வருகிறார். கர்த்தருடைய பிரசன்னத்தை அவருடைய சகல ஐசுவரியங்களோடும் அனுபவித்துமகிழ நீங்கள் விரும்புகிறீர்களா? அவருடைய பிரசன்னத்தை அவருடைய சகல ஐசுவரியங்களோடும் அனுபவிக்க மிகச் சிறந்த வழி அவருடைய பெயரை நோக்கிக் கூப்பிடுவது தான். நெடுஞ்சாலையில் வாகனம் ஓட்டிக்கொண்டிருக்கும்போதும், வேலைசெய்து கொண்டிருக்கும் போதும் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் நீங்கள் கூப்பிடலாம். கர்த்தர் உங்களுக்குச் சமீபமாகவும், ஐசுவரிய சம்பன்னராகவும் இருக்கிறார்.

மேலும், கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிடுவதி னால் நம்மை நாமே கிளர்ந்தெழப்பண்ண முடியும். "உம்முடைய நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிறவனும், உம்மைப் பற்றிக்கொள்ளும்படிக்குத் தன்னைத் தானே கிளர்ந்தெழப் பண்ணுகிறவனும் இல்லை," என்று ஏசாயா *64:7* சொல்கிறது. நாம் உற்சாகம்குன்றி சோர்வாக உணரும்போது கர்த்தராகிய இயேசுவின் பெயரை நோக்கிக் கூப்பிடுவதினால் நம்மை நாமே தூக்கிநிமிர்த்தி, கிளர்ந்தெழப்பண்ணமுடியும்.

கூப்பிடும் வழி

நாம் எப்படிக் கர்த்தரை நோக்கிக் கூப்பிட வேண்டும்? தூய இருதயத்தோடே நாம் அவரை நோக்கிக் கூப்பிட வேண்டும் *(2 தீமோ. 2:22)*. நம் கூப்பிடுதலின் ஊற்றாகிய நம் இருதயம் கர்த்தரைத் தவிர வேறொன்றையும் தேடாமல் தூய்மையாக இருக்கவேண்டும். மேலும், தூய உதடுகளால் கூப்பிடவேண்டும் *(செப். 3:9)*. நம் பேச்சை நாம் விழிப்புடன் காக்கவேண்டும். ஏனெனில் வீண்பேச்சைப்போல உதடுகளைக் கறைப்படுத்துவது வேறெதுவும் இல்லை. வீண் பேச்சினால் நம் உதடுகள் அசுத்தமானால், கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவது நமக்குக் கடினமாயிருக்கும். தூய இருதயத்துடனும், தூய உதடுகளுடனும் கூடவே, திறந்த வாயும் நமக்குத் தேவை *(சங். 81:10)*. கர்த்தரை நோக்கிக் கூப்பிட நம் வாயை நாம் விரிவாய்த் திறக்கவேண்டும். மேலும் நாம் ஒன்று சேர்ந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடவேண்டும். "அன்றியும், பாலியத் துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, தூய்மையான இருதயத்தோடே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுடனே, நீதியையும், விசுவாசத்தையும்,

அன்பையும், சமாதானத்தையும் அடையும்படி நாடு," என்று 2 தீமோத்தேயு 2:22 சொல்கிறது. கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிடவேண்டும் என்ற நோக்கத்திற்காக நாம் ஒன்றுகூடிவர வேண்டும். "கர்த்தாவே நான் அனுதினமும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்," என்று சங்கீதம் 88:9 சொல்கிறது. ஆகையால், அனுதினமும் நாம் அவருடைய பெயரை நோக்கிக் கூப்பிட வேண்டும். மேலும், "நான் உயிரோடிருக்குமளவும் அவரை நோக்கிக் கூப்பிடு வேன்," என்று சங்கீதம் 116:2 சொல்கிறது. நாம் உயிரோ டிருக்குமளவும் கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிட வேண்டும்.

பயிற்சியின் அவசியம்

கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிடுவது என்பது வெறுமனே ஓர் உபதேசம் அல்ல. இது மிகவும் நடைமுறைக் குரியது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணியும், இதை நாம் பயிற்சிசெய்ய வேண்டும். நாம் நம் ஆவிக்குரிய சுவாசத்தை ஒருபோதும் நிறுத்தக்கூடாது. மிக ஏராளமான ஜனங்கள், குறிப்பாகப் புதிய விசுவாசிகள், கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிற பயிற்சியை ஆரம்பிப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதால், அவரை அறியமுடியும் என்றும், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமைக்குள் வரமுடியும் என்றும், அவருடைய உடனடி இரட்சிப்பை அனுபவிக்க முடியும் என்றும், அவரோடு ஒன்றாக நடக்கமுடியும் என்றும் ஏராளமான கிறிஸ்தவர்கள் இன்று கண்டுகொண்டிருக்கி றார்கள். எந்தச் சூழ்நிலையிலும், எந்த நேரத்திலும், "கர்த்தராகிய இயேசுவே! ஆ கர்த்தராகிய இயேசுவே" என்று கூப்பிடுங்கள். அவருடைய பெயரை நோக்கிக் கூப்பிடுவதை நீங்கள் பயிற்சிசெய்தால், கர்த்தருடைய ஐசுவரியங்களை அனுபவித்து மகிழ்வதற்கு இது மிக அற்புதமான வழி என்பதை நீங்கள் காண்பீர்கள்.

அத்தியாயம் ஐந்து

கிறிஸ்துவை அனுபவமாக்குவதற்கான திறவுகோல்— மனித ஆவி

"ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே,...அவருக்குள் நடந்துகொண்டு" (கொலோ. *2:6*). கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்வது மிக அற்புதமான அனுபவம், இருப்பினும் அது ஓர் ஆரம்பம் மட்டுமே, அதாவது, நம் கிறிஸ்துவினுடைய செல்வங்களின் முன்சுவை மட்டுமே. கிறிஸ்து என்னவாகவெல்லாம் இருக்கிறாரோ அவையெல்லா வற்றையும் அனுபவமாக்கி, எல்லாக் காரியங்களிலும் அவரால் வாழும்படி அநேகக் கிறிஸ்தவர்கள் விரும்புகிறார்கள். "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து"வோடு (கொலோ. *3:4*) அனுதின நடையின் அனுபவத்திற்குள் இந்தச் சிறு புத்தகம் அவர்களைக் கொண்டுவர உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்.

நாம் ஓர் எடுத்துக்காட்டுடன் ஆரம்பிப்போம். பூட்டப்பட்ட ஓர் அறைக்குள் நுழைவதற்குமுன்பு, நாம் திறவுகோலையும், அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதையும் அறிய வேண்டும். அதுபோல, கிறிஸ்துவின் சகல நிறைவையும் அனுபவமாக்கு வதற்குமுன்பு, நாம் திறவுகோலையும், அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதையும் அறியவேண்டும். அப்படியிருக்க, இந்தச் சிறு புத்தகத்தின் குறிக்கோள் திறவுகோலைச் சுட்டிக்காட்டுவதே ஆகும். திறவுகோல் என்ன என்றும், அதை எப்படிப் பயன்படுத்துவது என்றும் நாம் அறிந்திருந்தால், நம்முடைய ஜீவனாகிய இந்த வளமான கிறிஸ்துவின் சகல நிறைவையும் அனுபவமாக்குவதற்கான கதவைத் திறக்கக்கூடிய இரகசியத்தை நாம் கொண்டிருக்கிறோம். ஆகவே, திறவுகோல் அதிமுக்கியத்துவம்வாய்ந்தது.

புதிய ஏற்பாட்டில் ஒரு மிக முக்கியமான வசனம் *1* தெசலோனிக்கேயர் *5:23*: "சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் *ஆவி, ஆத்துமா, சரீரம்* முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக." மனிதன் முப்பகுதிகளால் ஆனவன்: ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம். இவைகள் ஒரு மனிதப் பிறவியின் *மூன்று* வித்தியாசமான, தனித்தனியான பகுதிகள் ஆகும்.

சரீரத்திற்கும், ஆத்துமாவுக்கும் இடையே வித்தியாசப்படுத்திக் காட்டுவது சுலபம்; இந்தப் பகுதிகள் வெவ்வேறு பகுதிகள் என்பது எல்லாருக்கும் தெரியும். ஆனால் கிறிஸ்தவர்கள் ஆவியிலிருந்து

ஆத்துமாவை வேறுபடுத்திப் பார்ப்பது சுலபமல்ல. உண்மையில், ஆவியும் ஆத்துமாவும் ஒன்றுதான் என்று பெரும்பாலானோர் நினைத்திருக்கிறார்கள். ஆனால் மனிதனுடைய பகுதிகள் மூன்று என்று மேற்சொன்ன வசனத்தில் தேவ ஆவியானவர் தம்முடைய வார்த்தையில் தெளிவாகக் கூறுகிறார். இந்தப் பகுதிகள் மூன்று இணை இடைச்சொற்களால் இணைக்கப்பட்டிருக்கின்றன: "ஆவியும், ஆத்துமாவும், சரீரமும்."

ஆவிக்கும், ஆத்துமாவுக்கும் இடையே வித்தியாசத்தைக் காண்பிக்கிற இன்னொரு வசனம் எபிரேயர் 4:12: "தேவ னுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ள தாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக் கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது." ஆத்துமாவும், ஆவியும் ஒன்று அல்ல; ஏனென்றால், அவைகள் வெவ்வேறாகப் பிரிக்கப்பட முடியும் என்று இந்த வசனம் சுட்டிக்காட்டுகிறது. ஆத்துமா ஆத்துமாதான், ஆவி ஆவிதான்; இவ்விரண்டும் பிரிக்கப்படவேண்டும்.

பிரபஞ்சத்தில் மூன்று வெவ்வேறு உலகங்கள் இருக் கின்றன: பௌதீக உலகம், உளவியல் உலகம் மற்றும் ஆவிக்குரிய உலகம்; மனிதன் மூன்று வெவ்வேறு பகுதி களால் ஆனவனாக இருப்பதால், இந்த மூன்று வெவ்வேறு மண்டலங்களையும் அவனால் தொடர்புகொள்ளமுடியும். முதலாவது, ஏராளமான பௌதீகக் காரியங்களுடன்கூடிய பௌதீக உலகம் இருக்கிறது. கேட்குதல், பார்த்தல், முகர்தல், சுவைத்தல், உணருதல் என்ற நம்முடைய பௌதீக சரீரத்தின் ஐம்புலன்களின் வழியாய் பௌதீக உலகத்தை நாம் தொடர்பு கொள்கிறோம். அதன்பின் ஆவிக்குரிய உலகம் இருக்கிறது. நம்முடைய சரீரத்தின் ஐம்புலன்களால் ஆவிக்குரிய உலகத்தை நாம் தொடர்புகொள்வது சாத்தியமா? நிச்சயமாக இல்லை. நம் ஆவியால் மட்டுமே ஆவிக்குரிய உலகத்தை தொடர்புகொள்ளமுடியும். நம் ஆவியில் நமக்கு ஆவிக்குரிய உணர்வு இருக்கிறது; அதினால் நாம் தேவனை உணரமுடியும்.

உளவியல்ரீதியான உலகமும் இருக்கிறது, அது பௌதீக மானதோ அல்லது ஆவிக்குரியதோ அல்ல. யாரோவொருவர் ஒரு மிகப்பெரிய தொகையை உங்களுக்குக் கொடுக்கிறார்கள், நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இந்த சந்தோஷம் பௌதீக உலகத்திற்குரியதா அல்லது ஆவிக்குரிய உலகத்திற்குரியதா? சந்தோஷமும், மகிழ்ச்சியும், துக்கமும்கூட உளவியல்ரீதியான உலகத்திற் குரியதாகும். Psychology (உளவியல்) என்ற ஆங்கில வார்த்தை, புதிய ஏற்பாட்டில்

soul (ஆத்துமா) என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள psyche என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது. உளவியல் என்பது "ஆத்துமாவைப்பற்றிய ஆய்வு." எனவே உளவியல்ரீதியான அல்லது ஆன்மீகமான உலகம் இருக்கிறது; அதில் துக்கமும், மகிழ்ச்சியும் இருக்கிறது. ஆவிக்குரிய உலகமும், உளவியல்ரீதியான உலகமும், பௌதீக உலகமுமான மூன்று வெவ்வேறு உலகங்களை மனிதன் தொடர்புகொள்வதற்காக ஆவி (சக. 12:1), ஆத்துமா (எரே. 38:16), சரீரம் (ஆதி. 2:7) என்னும் முப்பகுதியுடன் அவன் படைக்கப்பட்டிருக்கிறான்.

ஆத்துமாவும் மூன்று பகுதிகளுடன் இருக்கிறது. இதில் ஒரு பகுதிதான் உணர்ச்சி (உபா. 14:26; உ. பா. 1:7; மத். 26:38); உணர்ச்சியில்தான் நாம் நேசிக்கிறோம், விரும்பு கிறோம், வெறுக்கிறோம், மகிழ்ச்சியோ அல்லது துக்கமோ அடைகிறோம். ஆத்துமாவின் இன்னொரு பகுதி மனம் (யோசு. 23:14; சங். 139:14; நீதி. 19:2). மனதில் நமக்கு எண்ணங்களும், பரிசீலனைகளும், யோசனைகளும், கருத்துக்களும் இருக்கின்றன. ஆத்துமாவின் மூன்றாவது பகுதி சித்தம் (யோபு 7:15; 6:7; 1 நாளா. 22:19); அதின்மூலம் நாம் தீர்மானங்களை எடுக்கிறோம். நம்முடைய மகிழ்ச்சி அல்லது துக்கம் உணர்ச்சியைப்பற்றிய ஒன்று. நாம் பரிசீலிக்கும்போது அல்லது தர்க்கிக்கும்போது, நம் மனதைப் பயன்படுத்து கிறோம். ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்ய நாம் தீர்மானம் எடுக்கும்போது, சித்தம் இயங்குகிறது. அப்படியானால், மனமும், சித்தமும், உணர்ச்சிகளும் ஆத்துமாவின் மூன்று பகுதிகளாக இருக்கின்றன. மனதினால் நாம் சிந்திக்கிறோம், சித்தத்தினால் நாம் தேர்ந்தெடுக்கிறோம், உணர்ச்சிகளினால் நாம் விரும்புகிறோம் அல்லது வெறுக்கிறோம், நேசிக்கிறோம் அல்லது பகைக்கிறோம்.

நாம் உளவியல்சார்ந்த உலகத்தைத் தொடர்புகொள்ளும் போது, நம் ஆள்தத்துவத்தின் உளவியல்சார்ந்த பகுதியான ஆத்துமாவைப் பயன்படுத்துகிறோம். ஆவிக்குரிய உலகத்திலும் கோட்பாடு இதே தான். ஆவிக்குரிய ஒன்றை நாம் தொடர்புகொள்ள விரும்பினால், நாம் நம் ஆவியைப் பயன்படுத்தவேண்டும். இதை நான் இவ்வாறு விளக்கிக் காட்டுகிறேன். யாரோவொருவர் தன் குரலினால் பேசுகிறார் என்று வைத்துக்கொள்வோம். சத்தம் நிஜமானது, ஆனால் நீங்கள் உங்களுடைய காதுகளை அடைத்துக்கொண்டு, அவ ருடைய குரலைப் பார்ப்பதற்கு உங்களுடைய கண்களைப் பயன்படுத்த முயற்சித்தால், நீங்கள் அதைச் செய்யமுடியாது. நீங்கள் தவறான உறுப்பைப் பயன்படுத்துகிறீர்கள். நாம் அவருடைய குரலின் சத்தத்தைக் கேட்க விரும்பினால், நம் கேட்கும் உறுப்பை நாம் பயன்படுத்தவேண்டும். நிறங்களை வேறுபடுத்திப் பார்ப்பதற்கும் இதே கோட்டுபாடு தான். நீலம்,

பச்சை, கருஞ்சிவப்பும், சிவப்பும், மற்ற பல அழகான நிறங்களும் உங்களிடம் இருக்கலாம். ஆனால் நீங்கள் நிறங்களைக் கேட்பதற்கு உங்கள் காதுகளைப் பயன் படுத்தினால், நீங்கள் ஒருபோதும் அவைகளின் அழகை அனுபவித்துமகிழமுடியாது. பொருட்கள் அங்கு இருக்கின்றன, ஆனால் நீங்கள் அவைகளைப் பார்க்கமுடியாது; ஏனென்றால், நீங்கள் தவறான உறுப்பைப் பயன்படுத்துகிறீர்கள்.

அப்படியானால், நாம் தேவனைத் தொடர்புகொள்வது எப்படி? நாம் எந்த உறுப்பை பயன்படுத்துவது? முதலாவது, தேவன் எப்படிப்பட்ட சாரப்பொருளாயிருக்கிறார் என்பதை நாம் பார்க்கவேண்டும். தேவன் ஆவியாயிருக்கிறார் என்று 1 கொரிந்தியர் 15:45, 2 கொரிந்தியர் 3:17, யோவான் 14:16-20, யோவான் 4:24 ஆகியவைகள் நமக்குக் கூறுகின்றன. நம்முடைய பௌதீக சரீரத்தால் நாம் தேவனைத் தொடர்புகொள்ளமுடியுமா? முடியாது! இது தவறான உறுப்பு. உளவியல்ரீதியான உறுப்பான ஆத்துமாவினால் நாம் தேவனைத் தொடர்புகொள்ளமுடியுமா? முடியாது! இதுவும் தவறான உறுப்பாகும். நம் ஆவியால் மட்டுமே நாம் தேவனைத் தொடர்புகொள்ளமுடியும்; ஏனென்றால், தேவன் ஆவியாயிருக்கிறார். "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்," என்று யோவான் 4:24 கூறுகிறது. இது ஒரு மிக முக்கியமான வசனம். முதலில் சொல்லப்பட்ட ஆவி, (ஆங்கிலத்தில்) Spirit என்பது, capital 'S'-ஆக இருக்கிறது, அது தெய்வீக ஆவியை, அதாவது, தேவனையே குறிக்கிறது. இரண்டாவது சொல்லப்பட்ட ஆவி, (ஆங்கிலத்தில்) spirit என்பது, capital 'S'-ஆக இல்லை; ஏனென்றால், அது நம் மனுஷீக ஆவியைக் குறிக்கிறது. தேவன் ஆவியாயிருக்கிறார், நாம் அவரை நம் ஆவியில் தொழுதுகொள்ளவேண்டும். நாம் சரீரத்தைக்கொண்டோ அல்லது ஆத்துமாவைக்கொண்டோ அவரை தொழுதுகொள்ள அல்லது தொடர்புகொள்ளமுடியாது. தேவன் ஆவியாயிருப் பதால், நம் ஆவியிலும், நம் ஆவியாலும்தான் நாம் அவரைத் தொடர்புகொள்ளவும், அவரைத் தொழுது கொள்ளவும், அவரோடு ஐக்கியங்கொள்ளவும் முடியும்.

இந்த இரண்டு ஆவிகளும் குறிப்பிடப்பட்டிருக்கிற இன்னொரு வசனத்தை நாம் இப்போது பார்ப்போம்: "ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்," என்று யோவான் 3:6 கூறுகிறது. நாம் மீண்டும் பிறந்திருக்கிறோம் அல்லது மறுபிறப்பு அடைந்திருக்கிறோம் என்று நாமெல்லாரும் அறிந்திருக்கிறோம், ஆனால் இதன் அர்த்தம் என்ன? இதன் அர்த்தம் என்னவென்றால், நம்முடைய ஆவி தேவனுடைய ஆவியினால் மறுபடிபிறப்பிக்கப் பட்டிருக்கிறது என்பதே ஆகும். ஆவியினால் (தேவனுடைய

ஆவியினால்) பிறப்பது ஆவியாயிருக்கும் (மனித ஆவி). நாம் எங்கே மீண்டும் பிறந்திருக்கிறோம் என்று இந்த வசனம் கூறுகிறது. நாம் சரீரத்திலோ அல்லது ஆத்துமாவிலோ அல்ல, ஆவியில் மீண்டும் பிறந்திருக்கிறோம். நம்முடைய இரட்சகரான கர்த்தராகிய இயேசுவில் நாம் விசுவாசித்தபோது, தேவனுடைய ஆவி நம்முடைய ஆவிக்குள் வந்தார். பரிசுத்த ஆவியானவர் நம்முடைய ஆவியை மறுபடிபிறப்பிக்க, உயிர்ப்பித்து, ஜீவனை வழங்கினார். நாம் கர்த்தராகிய இயேசுவில் விசுவாசித்தபொழுதே, பரிசுத்த ஆவியானவர் நம் ஆவியை உயிர்ப்பித்து, மறுபடி பிறப்பிக்க, ஜீவனாகக் கிறிஸ்துவுடன் வந்தார்; அந்நேரமுதல் அவர் நம் ஆவியில் தங்கியிருக்கிறார் (யோவான் 4:24; ரோமர் 8:16; 2 தீமோ. 4:22; 1 கொரி. 6:17).

இயேசுகிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்து, முப்பத்து மூன்றரை வருடங்கள் மனிதனாக வாழ்ந்தார். அதன்பின், அவர் நம் பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டார்; அவர் மரித்தார், உயிர்த்தெழுந்தார், ஜீவன் தரும் ஆவியாக்கப் பட்டார் (1 கொரி. 15:45). "கர்த்தரே [கிறிஸ்துவே] ஆவியானவர்," என்று 2 கொரிந்தியர் 3:17 கூறுகிறது. ஜீவன் தரும் ஆவியானவராகிய கிறிஸ்து நமக்குள் வந்திருக்கிறார் என்பதற்காக நாம் அதிகமான துதியை ஏறெடுக்கவேண்டும். சரீரம், ஆத்துமா, ஆவி ஆகியவைகளால் தொகுக்கப்பட்ட பாத்திரங்களாக அல்லது கொள்கலங்களாக நாம் படைக்கப்பட்டோம். நம் மனித ஆவிக்குள்தான் ஜீவன் தரும் ஆவியானவராக கிறிஸ்து வந்திருக்கிறார். இப்போது தேவன் நம் ஆவியில் தங்கியிருக்கிறார் என்பதை மேற்சொன்ன வசனங்கள் தெளிவாக்கியிருக்கின்றன. ஆயினும், நமக்குள் இருக்கிற தேவன், தேவன் மட்டுமல்ல, இயேசுகிறிஸ்து என்பதையும் ஞாபகத்தில் வைத்திருங்கள். கிறிஸ்து என்னவாக வெல்லாம் இருக்கிறாரோ, அவர் என்னவெல்லாம் செய்தாரோ, அவர் என்னவெல்லாம் பெற்றிருக்கிறாரோ, அடைந்திருக்கிறாரோ அவையெல்லாம் இந்த ஜீவன் தரும் ஆவியானவரில் அடங்கியிருக்கின்றன. இப்போது இந்த ஜீவன் தரும் ஆவி யானவர் நமக்குள் வந்து, நம் ஆவியோடு கலந்திணைந்து, இதனால் நம்மைத் தம்மோடு ஒரே ஆவியாக இணைத் திருக்கிறார் (1 கொரி. 6:17). அவரைத் துதியுங்கள், நாம் கர்த்தரோடு நம் ஆவியில் ஒன்றாக இருக்கிறோம். *எப்படி நம்முடைய ஆவிக்குத் திரும்புவது* என்பதை நாம் அறிந்திருந்தால், நாம் கிறிஸ்துவைத் தொடர்புகொள்ளமுடியும். *இதுவே இரகசியம்! இதுவே திறவுகோல்!*

அவிசுவாசிகளுக்கு சரீரத்தில் பௌதீக ஜீவனும், ஆத்து மாவில் உளவியல்ரீதியான அல்லது மனுஷிக ஜீவனும் மட்டுமே இருக்கின்றன. அவர்களுடைய ஆவியில் தேவ னுடைய நித்திய

ஜீவன் அவர்களிடம் இல்லை; ஏனென்றால், அவர்கள் கிறிஸ்துவை நித்திய ஜீவனாகத் தங்கள் ஆவிக்குள் பெற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, அவிசுவாசிகள் ஆத்துமாவி னால் அல்லது சரீரத்தினால் மட்டுமே வாழமுடியும். நாம் இரட்சிக்கப்படுவதற்குமுன்பு, நாமெல்லாரும் ஆத்துமாவில் வாழ்ந்தோம், நடந்தோம், நம் ஆள்தத்துவத்தை வைத்துக் கொண்டோம். ஆனால் இப்போது, நாம் இரட்சிக்கப்பட்ட பிறகு, இன்னொரு ஜீவனை நமக்குள் கொண்டிருக்கிறோம்; இது கிறிஸ்துவே; இந்த ஜீவனால் வாழ நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் இன்னொரு திசையில் வாழும்படி திரும்ப வேண்டும், அதாவது, ஆத்துமாவிலிருந்து ஆவிக்குத் திரும்ப வேண்டும் என்பதே இன்று நம்முடைய தேவை. நாம் இரட்சிக்கப்படுவதற்குமுன்பு, ஆத்துமாவில் மனுஷிக ஜீவனால் வாழ்ந்துகொண்டிருந்தோம். நாம் இரட்சிக்கப்பட்டிருப்பதால், ஆவியில் தெய்வீக ஜீவனால் வாழவேண்டும்.

எப்போதுமே நம் ஆவிக்குத் திரும்புவதற்கான தேவையை இப்போது நீங்கள் பார்க்கிறீர்களா? கிறிஸ்து நம் ஆவியில் இருக்கிறார், நாம் கிறிஸ்துவை சந்திக்க விரும்பினால், நாம் நம் ஆவிக்குத் திரும்பவேண்டும். நாம் எதையும் செய்வதற்கு, எங்கும் போவதற்கு அல்லது எதையும் சொல்வதற்குமுன்பு, நம் ஆவிக்குத் திரும்பவேண்டும். நாம் இதைச் செய்ய கற்றுக்கொண்டால், நம் வாழ்வுகளில் என்னே மாற்றத்தைப் பார்ப்போம்.

உண்மையாகவே இது அற்புதமானது! கிறிஸ்து ஆவியான வராக இருக்கிறார், நமக்கு ஓர் ஆவி இருக்கிறது, இவ்விரண்டு ஆவிகளும் ஒன்றாக இணைந்திருக்கின்றன. இப்போது நம் ஆவிக்குத் திரும்பி, நம் ஆவியைப் பயிற்சிசெய்வதால் அல்லது பயன்படுத்துவதால், நமக்குக் கிறிஸ்து என்னவாக வெல்லாம் இருக்கிறாரோ அவையெல்லாவற்றின் நிஜத்தையும் அனுபவமாக்குவதற்கான வழி நம்மிடம் இருக்கிறது. தேவ வெளியாக்கத்திற்கென்று பயிற்சிசெய்யும்படி *1 தீமோத்தேயு 4:7-8*-ல் அப்போஸ்தலனாகிய பவுல் நம்மிடம் கூறினார். ஒருவேளை சில சகோதரர்கள் தங்கள் உடலுக்காக அனுதின பயிற்சிகளை அல்லது உடற்பயிற்சிகளைச் செய்யக்கூடும். இது நல்லது; உடல்ரீதியான பயிற்சிக்குக் கொஞ்சம் லாபம் உண்டு என்று பவுல்கூட சொன்னார். இது நல்லது, ஆனால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே. ஆயினும், இன்னொரு வகையான பயிற்சியை பவுல் குறிப்பிடுகிறார்; அது இன்றைக்கும் நித்தியத்திற்குமாக என்றென்றைக்கும் நல்லது! ஆகையால், இந்த வேறொரு வகையான பயிற்சிக்கு, அதாவது நம் ஆவியைப் பயிற்சிசெய்வதற்கு நாம் அதிக கவனம்செலுத்தவேண்டும்.

நாம் தேவவெளியாக்கத்திற்கென்று பயிற்சிசெய்வதென் றால்,

நம் ஆவியைப் பயிற்சிசெய்வதாகும் என்று எப்படி அறிகிறோம்? முதலாவது பகுத்தறிவுள்ள கண்ணோட்டத்திலிருந்து இதைப் பரிசீலிக்கலாம். இரண்டு வகையான பயிற்சிகளைப்பற்றி பவுல் பேசுகிறார்: ஒன்று உடற்பயிற்சி, ஆனால் இன்னொரு பயிற்சி என்ன? அது மனதின் பயிற்சியா, அதாவது உளவியல்ரீதியான அல்லது ஆத்துமாவுக்குரிய பயிற்சியா? ஆரம்பப் பள்ளியிலும், உயர்நிலைப் பள்ளி யிலும், மேல்நிலைப் பள்ளியிலும், கல்லூரியிலும் இப்படிப்பட்ட பயிற்சியை நாம் பெற்றிருக்கிறோம் என்று அறிந் திருக்கிறோம். பிள்ளைப்பருவதிலிருந்து நாம் நம் மனதைப் பயிற்சிசெய்ய கற்றுக்கொண்டுள்ளோம். நம் ஆள்தத்துவத்தின் இந்தப் பகுதியைப் பயிற்சிசெய்ய நாம் மிக நன்றாகக் கற்றுக்கொண்டுள்ளோம். உடலையும் மனதையும் பயிற்சி செய்வதைத்தவிர, வேறு எந்த வகையான பயிற்சி நமக்கு உண்மையாகவே தேவை? நம் ஆவியின் பயிற்சி என்று தானாகவே நாம் பதிலளிக்கவேண்டும்.

கிறிஸ்தவர்கள் என்ற முறையில் நாம் என்ன செய்யப் போகிறோம் என்பது காரியமல்ல, மாறாக அதை எப்படி செய்யப்போகிறோம் என்பதுதான் காரியம். நாம் செயல் படுவது உடலினாலா, ஆத்துமாவினாலா அல்லது ஆவியினாலா? அநேக சகோதர சகோதரிகள் தங்கள் ஆவியைப் பயன்படுத்தத் தவறுகிறார்கள். அவர்கள் தொடர்ச்சியாகத் தங்கள் மனதை, உணர்ச்சியை, சித்தத்தை அல்லது தங்கள் பௌதீக உடலைப் பயன்படுத்துகிறார்கள், ஆனால் தங்கள் ஆவியைப் பயன்படுத்துவதில்லை. நாம் பெரும்பாலும் நம் ஆத்துமாவைப் பயிற்சிசெய்வதினால்தான் ஜெபிக்கிறோம், பேசுகிறோம், வாக்குவாதம்செய்கிறோம், வேதாகமத்தை வாசிக் கிறோம், தர்க்கம்செய்கிறோம், விவாதம்செய்கிறோம், கலந் துரையாடுகிறோம். நம் ஆத்துமாவிலிருந்து வேதவாக்கியங்களை மேற்கோள்காட்டவும் முடியும். இப்போது நாம் ஆவிக்குத் திரும்புவதற்கான நேரம். நாம் திரும்பிவர வேண்டும்!

எடுத்துக்காட்டாக, நாம் ஜெபத்தில் கர்த்தரை அணுகும் போது அல்லது அவரைத் தொடர்புகொள்ள தேவனுடைய வார்த்தையிடம் வரும்போது, அவரைத் தொடர்புகொண்டு, அவரோடு ஐக்கியங்கொள்வதற்கு நாம் நம் ஆத்துமாவுக்குரிய ஜீவனை (நம் எண்ணங்களையும், நம் உணர்ச்சிகளையும், நம் விருப்பங்களையும்) தள்ளிவிட்டு, நம் ஆவிக்குத் திரும்பவேண்டும். நாம் நம் ஆத்துமாவின் புலன்களைப் பயிற்சிசெய்வதால் கிறிஸ்துவை ஒருபோதும் சந்திக்க முடியாது. கிறிஸ்து நம் ஆவியில் இருக்கிறார், நம் ஆத்துமாவில் இல்லை. நாம் நம் ஆவியைப் பயன்படுத்துவதால் மட்டுமே அவரை சந்திக்கமுடியும். மனம், உணர்ச்சி, சித்தம் ஆகிய புலன்களை

நாம் கைவிடவேண்டும் என்று கர்த்தர் கோருவதாக நாம் நினைக்கக்கூடாது. இல்லை. மனம், உணர்ச்சி, சித்தம் ஆகியவை தேவனுடைய மகிமைக்காகப் பயன்படுத்தப்பட அவரால் படைக்கப்பட்டன. ஆனால் நம் வாழ்க்கையின் மையமான சீரழிக்கப்பட்ட, ஆதாமுக்குரிய மனம், உணர்ச்சி, சித்தம் ஆகியவைகளைக் கைவிட்டு, நம் ஆவியிலுள்ள கிறிஸ்துவின் ஜீவன் நம் ஆள்தத்துவத்தைக் கட்டுப்படுத்த விடவேண்டும் என்பதே கர்த்தருடைய கோரிக்கை. இயற்கையான மனிதன் ஒருபோதும் தேவனைத் தொடர்புகொள்ளவோ, அவரோடு ஐக்கியங்கொள்ளவோ முடியாது என்னும் அளவுக்கு நம் மனம், உணர்ச்சி, சித்தம் ஆகியவைகள் சேதப்படுத்தப்பட்டன: "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்" *(1 கொரி. 2:14)*. இதனால்தான் நம் ஆவியில் நமக்குப் புதிய பிறப்பு தேவைப்பட்டது *(யோவான் 3:6-7)*.

இரட்சிப்புக்குமுன்பு நாம் நூறு சதவிகிதம் விழுந்துபோயிருந்தோம். தேவனுக்கு முற்றும்முடிய எதிரான இந்த விழுந்துபோன, ஆத்துமாவுக்குரிய ஜீவனிலும், ஜீவனாலும் நாம் வாழ்ந்தோம். ஒருபோதும் இந்த விழுந்துபோன ஜீவனி லிருந்து மீண்டும் எதையும் செய்யாமல், நம் ஆவியிலுள்ள தெய்வீக ஜீவனால் முழுவதும் வாழ நாம் கற்றுக் கொள்ளவேண்டும். இதுமுதல், நாம் நம் வாழ்க்கையின் ஊற்றாக ஆத்துமாவில் உள்ள நம் விழுந்துபோன ஜீவனை ஒருபோதும் எடுத்துக்கொள்ளாமல், நம் ஆவியில் உள்ள தெய்வீக ஜீவனை எடுத்துக்கொள்ளவேண்டும். ஆகவே, தள்ளப்பட்டு, அழிக்கப்படவேண்டியது மனம், உணர்ச்சி, சித்தம் அல்ல என்பதை நாம் உணரவேண்டும்; மாறாக ஆத்துமாவின் ஜீவனையே நாம் கைவிடவேண்டும். இந்த இயற்கையான, ஆத்துமாவுக்குரிய ஜீவன் ஏற்கெனவே சிலுவையில் அறையப்பட்டுவிட்டது *(கலா. 2:20; ரோமர் 6:6)*, இப்போது கிறிஸ்துவை நம் ஜீவனாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை நாம் உணரவேண்டும். ஆனால் நம் ஆத்துமாவின் புலன்கள் கர்த்தரை வெளிப்படுத்தும்படி ஆவியானவரால் பயன்படுத்தப்பட இன்னும் கருவிகளாக இருக்கின்றன.

ஆவியைப் பயிற்சிசெய்வது ஜெபத்திலும், தேவனுடைய வார்த்தையைத் தொடுவதிலும் மட்டுமல்ல, எல்லாக் காரியங்களிலும் உள்ளது என்பதில்கூட நாம் மிகத் தெளிவாக இருக்கவேண்டும். அது நல்லதோ கெட்டதோ, ஆவியில் உங்களுக்கு எந்த உறுதிப்படுத்துதலோ உணர்வோ இல்லையென்றால், நீங்கள் செய்யப்போவதை நிறுத்துங்கள், நீங்கள் சொல்லப்போவதை நிறுத்துங்கள். "அது நல்லதா, கெட்டதா?" என்று நாம் பரிசீலிக்கக்கூடாது. கிறிஸ்தவர்கள்

இதுபோல வாழக்கூடாது! "நான் ஆவியில் இருக்கிறேனா, ஆத்துமாவில் இருக்கிறேனா? நான் இதை நானாகவே செய்கிறேனா அல்லது கர்த்தரால் செய்கிறேனா?" என்பது மட்டுமே நம் பரிசீலனையாக இருக்கவேண்டும். *கர்த்தரால்* என்ற பதத்தை நாம் பயன்படுத்தும்போது, புறம்சார்ந்த விதத்தில் அல்ல, மாறாக அகம்சார்ந்தவிதத்தில் நாம் கர்த்தரைப்பற்றிப் பேசுகிறோம். நம் ஆவியோடு கலந்திணைந் துள்ள ஜீவன்தரும் ஆவியானவராக அவரைக் குறிப்பிடுகிறோம். எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் நாம் நம் ஆவியைப் பயிற்சிசெய்யவேண்டும்.

உடலுக்கும் ஆத்துமாவுக்கும் உள்ள வித்தியாசத்தை அறிவது சுலபம், ஆனால் ஆத்துமாவிலிருந்து ஆவியைப் பகுத்துணர்வது கடினம். பின்வருகிற எடுத்துக்காட்டு மிகவும் உதவிகரமானது. நாம் வாங்க விரும்புகிற ஏதோவொன்றைக் காண்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். நாம் எவ்வளவு அதிகமாக அதைப் பரிசீலிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் அதை வாங்க விரும்புகிறோம் என்று உணர்கிறோம். இறுதியாக, நாம் அதை வாங்கத் தீர்மானிக்கிறோம். நாம் அதை விரும்புவதால் உணர்ச்சி பயிற்சிசெய்யப்படுகிறது, நாம் அதைப் பரிசீலிப்பதால் மனம் பயிற்சிசெய்யப்படுகிறது, நாம் அதை வாங்கத் தீர்மானிப்பதால் சித்தம் பயிற்சி செய்யப்படுகிறது. ஆகவே, முழு ஆத்துமாவும் பயிற்சி செய்யப்படுகிறது. ஆனால் நாம் அதை வாங்கப் போகும் போது, நம்முள் ஆழமான ஏதோவொன்று எதிர்க்கிறது, தடுக்கிறது. இதுதான் ஆவி. ஆவியே நம்முள் இருக்கிற மிக ஆழமான பகுதி, நம் முழு ஆள்தத்துவத்தின் மிக உள்ளான பகுதி. நம் வாழ்க்கையெல்லாவற்றிலும் நம்முள்ளிருக்கிற இந்த மிக உள்ளான உணர்வை நாம் பின்பற்றவேண்டும்.

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் உண்மையாகவே இந்தக் குறியைத் தவறவிட்டுவிட்டார்கள் என்பது எல்லாருக்கும் தெளிவாக இருக்கிறதல்லவா? எது சரி, எது தவறு என்றுதான் நாம் எப்போதும் பரிசீலிக்கிறோம். ஏதோவொன்று தவறாக இருந்தால், நாம் அதைச் செய்யக்கூடாது, ஆனால் ஏதோ வொன்று சரியாக இருந்தால், நாம் அதைச் செய்யவேண்டும் என்று நாம் நினைக்கிறோம். இது வழியல்ல. சரியும் தவறும் மதத்தின் போதனையாகும். நாம் மதத்தின்படி செயல்பட்டால், கிறிஸ்துவுக்கு எந்த மதிப்பும் இல்லை. கிறிஸ்துவையும் தேவனுடைய இரட்சிப்பையும் அனுபவமாக்குகிற காரியம் முற்றிலும் மதத்திலிருந்து வித்தியாசமானது. இது சரியா தவறா என்ற காரியமல்ல, மாறாக ஆத்துமாவில் வாழ்ந்து, காரியங்களைச் செய்வதா அல்லது ஆவியில் வாழ்ந்து, காரியங்களைச் செய்வதா என்ற காரியமாகும். இந்தக் குறி கிறிஸ்தவத்தால் தவறவிடப்பட்டு, தொலைக்கப்பட்டிருக்கிறது. இன்று கர்த்தர் இந்தக் குறியை

மீட்டுத்திருப்பப்போகிறார், ஏனென்றால் இதுவே எல்லாவற்றிற்கும் "திறவுகோல்" ஆகும்.

நாம் செய்கிற, சொல்கிற எல்லாவற்றிலும் ஆவியில் இருக்கிறோமா அல்லது ஆத்துமாவில் இருக்கிறோமா என்பதை மட்டுமே நாம் பகுத்துணரவேண்டும். இது சரியா தவறா, நல்லதா கெட்டதா என்பதைப்பற்றிய காரியமல்ல, மாறாக கிறிஸ்துவா சுயமா, ஆவியா ஆத்துமாவா என்ற கேள்வியாகும். நம் முழு வாழ்க்கையும், அனுதின நடையும் நம் ஆவியில் இருக்கிறதா என்பதை நாம் பகுத்துணரவேண்டும்.

சுயத்தை மறுதலிக்கவும், ஆத்துமாவுக்குரிய ஜீவனோடு கூடிய ஆத்துமாவை இழக்கவும் வேண்டுமென்று மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நான்கு சுவிசேஷங்களிலும் கர்த்தராகிய இயேசு திரும்பத் திரும்ப கூறுகிறார் (மத். *16:24-26*; மாற்கு *8:35*; லூக். *9:23-25*; யோவான் *12:25*). அதன்பின், ஆவியில் நடக்கவும், வாழவும், ஜெபிக்கவும், எல்லாவற்றையும் செய்யவும் வேண்டும் என்று நிருபங்களில் மீண்டும் மீண்டும் நமக்குச் சொல்லப்படுகிறது (அப். *17:16*; ரோமர் *1:9*; *12:11*; *1* கொரி. *16:18*; *1* பேதுரு *3:4*; எபே. *6:18*; வெளி. *1:10*). ஆகவே, நாம் தொடர்ச்சியாக ஆவியில் நிலைத்திருக்கவேண்டும்.

ஒருவன் தன் ஆவியைப் பயிற்சிசெய்யும்போது, பரிசுத்த ஆவி விடுதலையோடு அசைகிறார், பாய்ந்தோடுகிறார். ஆனால் இதுதான் நிஜமான யுத்தம்; ஏனென்றால், நாமெல் லாரும் நம் ஆவிகளை விடுவித்தால், தான் தோற்றுவிடுவோம் என்பதை சாத்தான் அறிந்திருக்கிறான். பரிசுத்தவான்களுடைய ஆவியை நெரித்தல் என்ற தந்திரமான குறியை அவன் வஞ்சகமாய்த் தொட்டுவிடுகிறான். அவனால் நம் ஆவியை நெரிக்கமுடிந்தால், நம் கதை முடிந்தது, அவன் வெற்றிபெறுகிறான். ஆகையால், நாம் யுத்தஞ்செய்யவேண்டும். எல்லா இடத்திலும் எல்லா நேரத்திலும் நம் ஆவியை விடுவிப்பதைப் பழக்கப்படுத்த நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் தனியாக இருந்தாலும் பொது இடத்தில் இருந்தாலும், தொடர்ச்சியாக நம் ஆவியைப் பயிற்சிசெய்ய வேண்டும்.

முடிவாக, கிறிஸ்து நம் ஆவியில் உள்ள ஆவியானவர் என்பதை நாம் முதலாவது உணரவேண்டும். அதன்பின், நாம் ஆத்துமாவுக்குரிய சுயத்தை மறுதலித்து, நம் ஆவியில் கர்த்தரோடு ஒத்துப்போவதால் ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை அறியவேண்டும். இவ் விதமாக நாம் நம் ஆவியோடு ஒத்துழைக்கும்போது, எல்லாவற்றிலும் கிறிஸ்து முதலிடத்தைக் கொண்டிருப்பார். அப்போது நாம் நம் ஆவியில் கிறிஸ்துவை அனுபவ மாக்குவோம், எல்லாக் காரியங்களிலும் அவரைப் பிரயோகித்து, அவரை அனுபவமாக்குவது எப்படி என்பதைக் கற்றுக்கொள்வோம்.

கர்த்தருடைய இரண்டு வேலையாட்களைப்பற்றி

வாச்மென் நீ அவர்களும், அவருடைய உடன் வேலையாளாகிய விட்னெஸ் லீ அவர்களும் கிறிஸ்துவின் சரீரத்திற்கு செய்த ஊழியம், எண்பது வருடங்களுக்கும்மேலாக பூமியில் எல்லா கண்டங்களிலும் உள்ள கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஓர் ஆசீர்வாதமாக இருந்திருக்கிறது என்பதற்காக நாங்கள் கர்த்தருக்கு நன்றிசெலுத்துகிறோம். அவர்கள் எழுதியவைகள் அநேக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. எங்க ளுடைய வாசகர்கள் வாச்மென் நீயைப்பற்றியும், விட்னெஸ் லீயைப்பற்றியும் பல கேள்விகளை எங்களிடம் கேட்டிருக் கிறார்கள். அவர்களுடைய கேள்விகளுக்கான பதிலாக இந்த இரண்டு சகோதரர்களின் வாழ்க்கையையும் வேலையையும் பற்றிய இந்தச் சுருக்கமான குறிப்பை நாங்கள் வழங்குகிறோம்.

வாச்மென் நீ

வாச்மென் நீ பதினேழாவது வயதில் கிறிஸ்துவைப் பெற்றுக்கொண்டார். உலகமெங்கும் உள்ள தேடும் இருதய முள்ள விசுவாசிகளிடையே அவருடைய ஊழியம் நன்கு அறியப்பட்ட ஒன்று. ஆவிக்குரிய வாழ்க்கையைப்பற்றியும், கிறிஸ்துவுக்கும் அவருடைய விசுவாசிகளுக்கும் உள்ள உறவைப்பற்றியும் அவர் எழுதியவைகளிலிருந்து அநேகர் உதவிபெற்றிருக்கிறார்கள். இருந்தாலும், சபை வாழ்க்கையை நடைமுறைப்படுத்துதல், கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டி யெழுப்புதல் ஆகியவைகளை வலியுறுத்தின அவருடைய ஊழியத்தின் சம அளவுக்கு முக்கியமான இன்னோர் அம்சத்தைப் பற்றி அநேகருக்குத் தெரியாது. கிறிஸ்தவ வாழ்க்கையைப் பற்றியும் சபை வாழ்க்கையைப்பற்றியும் சகோதரர் நீ பல புத்தகங்களை எழுதியுள்ளார். வாச்மென் நீ தனது வாழ்க்கையின் முடிவுவரை, தேவனுடைய வார்த்தையில் உள்ள வெளிப்பாட்டைத் திரைநீக்கிக் காண்பிப்பதற்காக கர்த்தரால் கொடுக்கப்பட்ட கொடையாக இருந்தார். சீனாவில் இருபது வருடங்கள் சிறையில் கர்த்தருக்காக பாடுபட்டபின்பு, இயேசு கிறிஸ்துவின் உண்மையுள்ள சாட்சியாக 1972-ல் அவர் இறந்தார்.

விட்னெஸ் லீ

விட்னெஸ் லீ அவர்கள், வாச்மென் நீயின் மிக நெருக்கமான, மிக நம்பகமான உடன் வேலையாளாக இருந்தார். 1925-ல் பத்தொன்பது வயதில், அவர் சக்திவாய்ந்த ஆவிக்குரிய

மறுபிறப்பை அனுபவித்தார், மேலும் ஜீவனுள்ள தேவனை சேவிக்கும்படி தன்னை அவருக்கு அர்ப்பணித்தார். அந்த நேரத்திலிருந்து அவர் தீவிரமாய் வேதாகமத்தைப் படிக்க ஆரம்பித்தார். அவருடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்ப ஏழு வருடங்களில் ப்ளைமவுத் பிரதரனால் பெருமளவு ஆட்கொள்ளப்பட்டார். அதன்பின் அவர் வாச்மென் நீயை சந்தித்தார், அடுத்த 17 வருடங்களுக்கு 1949வரை அவர் சீனாவில் சகோதரர் நீயின் உடன் வேலையாளாக இருந்தார். இரண்டாம் உலகப் போரின்போது, சீனா ஜப்பானால் ஆக்கிரமிக்கப்பட்டபோது, அவர் ஜப்பானியர்களால் சிறையில் அடைக்கப்பட்டு, கர்த்தருக்கு செய்த தன் உண்மையுள்ள சேவைக்காகப் பாடுபட்டார். தேவனுடைய இவ்விரண்டு வேலையாட்களின் ஊழியமும் வேலையும் சீனாவில் கிறிஸ் தவர்களிடையே மாபெரும் எழுப்புதலைக் கொண்டுவந்தது, அது நாடுமுழுவதும் சுவிசேஷம் பரவுவதையும் நூற்றுக்கணக்கான சபைகள் கட்டியெழுப்பப் படுவதையும் விளைவித்தது.

1949-ல் சீனாவில் கர்த்தரை சேவித்த தன் உடன் வேலையாட்கள் எல்லாரையும் வாச்மென் நீ ஒன்றாக அழைத்து, தாயகத்திற்கு வெளியே தைவான் என்ற தீவில் ஊழியத்தைத் தொடரும்படி விட்னெஸ் லீக்குப் பொறுப் பளித்தார். அடுத்த சில வருடங்களில், தைவானிலும் தென் கிழக்கு ஆசியாவிலும் தேவனுடைய ஆசீர்வாதத்தின் காரண மாக, நூற்றுக்கும் அதிகமான சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

1960-களின் ஆரம்பத்தில் விட்னெஸ் லீ அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்துசெல்லும்படி கர்த்தரால் நடத்தப்பட்டார்; அங்கு கர்த்தருடைய பிள்ளைகளின் நலனுக்காக 35 வருடங் களுக்கும் மேலாக ஊழியம்செய்து, பணியாற்றினார். 1974முதல் ஜூன் 1997-ல் அவர் கர்த்தரிடம் செல்லும்வரை, கலிஃபோர்னியாவில் அனஹெம் என்ற நகரத்தில் அவர் இருந்தார். அமெரிக்காவில் பல ஆண்டுகளாக செய்த அவருடைய வேலையில் 300-க்கும் மேற்பட்ட புத்தகங்களை அவர் வெளியிட்டார்.

விசேஷமாக, கிறிஸ்துவின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்களைப்பற்றிய ஆழமான அறிவையும் அனுபவத்தையும் விரும்புகிற தேடும் இருதயமுள்ள கிறிஸ்தவர்களுக்கு விட்னெஸ் லீயின் ஊழியம் உதவியாக இருக்கிறது. எல்லாவற்றிலும் எல்லாவற்றையும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய அவருடைய சரீரமான சபையைக் கட்டி யெழுப்புவதற்காக கிறிஸ்துவை அறிவது எப்படி என்பதை சகோதரர் லீயின் ஊழியம் முழு வேதத்திலுள்ள தெய்வீக வெளிப்பாட்டைத் திறந்துகாண்பித்து நமக்கு வெளிப் படுத்துகிறது. கிறிஸ்துவின் சரீரத்தைக்

கட்டியெழுப்புகிற இந்த ஊழியத்தில் எல்லா விசுவாசிகளும் பங்குபெறவேண்டும்; இதனால் சரீரம் அன்பில் தன்னைத்தானே கட்டியெழுப்ப முடியும். இந்தக் கட்டுதலை நிறைவேற்றுவது மட்டுமே கர்த்தருடைய நோக்கத்தை நிறைவாக்கி, அவருடைய இருதயத்தைத் திருப்தியாக்கமுடியும்.

இவ்விரண்டு சகோதரர்களுடைய ஊழியத்தின் பிரதான குணாதிசயம் என்னவென்றால், அவர்கள் வேதாகமத்தின் தூய்மையான வார்த்தையின்படி சத்தியத்தைப் போதித்தார்கள்.

வாச்மென் நீ மற்றும் விட்னெஸ் லீயின் பிரதானமான நம்பிக்கைகளின் சுருக்கமான விவரிப்பு பின்வருமாறு:

1. பரிசுத்த வேதாகமம் பிழையற்ற, தேவனால் சுவாசித்து ஊதப்பட்ட, பரிசுத்த ஆவியானவரால் வார்த்தை வார்த்தை யாக ஏவப்பட்ட, முழுமையான தெய்வீக வெளிப்பாடாக இருக்கிறது.

2. தேவன் ஒரேவொரு மூவொரு தேவன், அதாவது நித்தியத்திலிருந்து நித்தியம்வரை சம அளவில் உடன் இருக்கிற, பரஸ்பரமாக ஒருவருக்குள் ஒருவர் இருக்கிற பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர்.

3. தேவனுடைய குமாரன், அதாவது தேவன்தாமே நம் மீட்பராகவும் இரட்சகராகவும் இருக்கும்படி கன்னியாகிய மரியாளிடமிருந்து பிறந்த, இயேசு என்ற பெயரையுடைய ஒரு மனிதனாக மனிதமாம்சமானார்.

4. உண்மையான மனிதராகிய இயேசு பிதாவாகிய தேவனை மனிதர்களுக்குத் தெரியப்படுத்தும்படி முப்பத்து மூன்றரை வருடங்கள் பூமியில் வாழ்ந்தார்.

5. தேவனுடைய பரிசுத்த ஆவியைக்கொண்டு தேவனால் அபிஷேகிக்கப்பட்ட கிறிஸ்துவாகிய இயேசு நம் பாவங்களுக்காக சிலுவையில் மரித்து, நம் மீட்பை நிறைவேற்றுவ தற்காக தம் இரத்தத்தைச் சிந்தினார்.

6. இயேசுகிறிஸ்து மூன்று நாட்கள் அடக்கம்பண்ணப் பட்டபிறகு, மரித்தோரைவிட்டு எழுப்பப்பட்டார்; நாற்பது நாட்களுக்குப்பிறகு அவர் பரலோகத்திற்குள் ஏறிச்சென்றார், அங்கே தேவன் அவரை எல்லாருக்கும் கர்த்தராக்கினார்.

7. கிறிஸ்து பரமேறியபின்பு தம்மால் தெரிந்துகொள்ளப் பட்ட அவயவங்களை ஒரே சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணும்படி தேவனுடைய ஆவியை ஊற்றினார். பாவிகளைக் கண்டித்து உணர்த்தவும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குள் தெய்வீக ஜீவனை வழங்கி அவர்களை மறுபடிபிறப்பிக்கவும், கிறிஸ்துவின் விசுவாசிகள் ஜீவனில் வளர்வதற்காக அவர்களில் குடியிருக்கவும், கிறிஸ்துவின் முழு வெளிப்படுதலுக்காக அவருடைய சரீரத்தைக் கட்டியெழுப்பவும் இந்த ஆவியானவர்

இன்று பூமியில் அசைகிறார்.

8. இந்த யுகத்தின் முடிவில் கிறிஸ்து தம் விசுவாசிகளை எடுத்துக்கொள்ளவும், உலகத்தை நியாயந்தீர்க்கவும், பூமியைச் சொந்தமாக்கிக்கொள்ளவும், தம் நித்திய இராஜ்ஜியத்தை ஏற்படுத்தவும் திரும்பிவருவார்.

9. ஜெயங்கொள்கிற பரிசுத்தவான்கள் ஆயிரவருட அரசாட்சியில் கிறிஸ்துவோடு அரசாளுவார்கள்; கிறிஸ்துவில் விசுவாசிக்கிற எல்லாரும் புதிய வானத்திலும் புதிய பூமியிலும் புதிய எருசலேமில் உள்ள தெய்வீக ஆசீர்வாதங்களில் நித்தியத்திற்கும் பங்குபெறுவார்கள்.

விநியோக கொள்கை

இந்த ஏழு புத்தகங்களின் மின்னணு வடிவத்தை இலவசமாக வழங்குவதில் லிவிங் ஸ்ட்ரீம் மினிஸ்ட்ரி மகிழ்ச்சியடைகிறது. இந்தப் புத்தகங்களை அநேகர் முழுவதுமாக வாசிப்பார்கள் என்றும் அவைகளை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவார்கள் என்றும் நங்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறோம். நல்ல ஒரு ஒழுங்கை பராமரிப்பதற்காக, இந்தக் கோப்புகளை உங்கள் சொந்த பயன்பாட்டிற்காக மட்டுமே அச்சிட்டுக்கொள்ளும்படி வேண்டிகொள்கிறோம். இந்தக் கோப்புகளை எந்த வடிவிலும், வேறெங்கும் மறுசமர்ப்பிப்பு செய்யாதீர்கள். கூடுதலாக பிரதிகளை நீங்கள் நகலெடுக்க விரும்பினால் copyrights@lsm.org ல், ஒரு எழுதப்பட்ட விண்ணப்பத்துடன் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள். நடைமுறை சட்டத்திற்கேற்ப காப்புரிமை சம்பந்தமான அறிவிப்புகள் யாவும் மதிக்கப்படவேண்டும் என்றும் நாங்கள் கேட்டுகொள்கிறோம். இந்த பிடிஎப் கோப்புகள் எந்த வகையிலும் வேறெந்த பயன்பாட்டிற்கும் திருத்தப்பட, மாற்றியமைக்கப்படக் கூடாது.